# தளிர்

ஆடி -- ஆவணி
புரட்டாதி -- ஐப்பசி
1983
விலை -- 3-00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான புடவைகளுக்கு விஜயம்செய்யுங்கள்

# கொழும்பு ரெக்ஸ்ரைல்ஸ்

மகேசன் கட்டிடம்

109, பெரிய கடை,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 24229

"நாளுக்கோர் புதுமை நாடுவது உண்மை"

இவற்றை அளிப்பதுதான்

★

# சீமாட்டி ஜவுளி சமுத்தரம்

158, நவீன சந்தை,

மின்சாரநிலைய வீதி,

யாழ்ப்பாணம்

தொலைபேசி : 24096

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர்

உள்ளே...

திரள்: 1 இல: 3, 4

ஆடி, ஆவணி
புரட்டாதி, ஐப்பசி } 1983

விலை 3/-

தொடர்புகட்கு :

ஆசிரியர் குழு
மறுமலர்ச்சிக் கழகம்
யாழ். பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்

அச்சிடப்பட்டது:

யாழ். புனிதவளன்
கத்தோலிக்க அச்சகம்.

## உள்ளே..

இலங்கையில் இனவாதமும்
1983-ம் இனக்கலவரமும் 1

பிலிப்பைன்ஸ்
நிலச் சீர்திருத்தமும், விவசாயமும் 8

மொன்காடா தாக்குதல் 14

"செசில் ராசேந்திரா"
அடக்குமுறையின் எதிர்ப்புக்குரல் 15

தேசியமும் பெண் நிலைவாதமும் 18

அல்கா—பொருளாதாரம் 22

இனக்கொலை காரணமாக ஆடி—ஆவணி இதழை குறித்த திகதியில் வெளியிட முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

(வாசகர்கள் கூடுதலாக உலக, உள்நாட்டு விவகாரங்கள் குறித்து கடிதங்களை அனுப்பினால் மகிழ்ச்சிக்குரியது.) —ஆசிரியர் குழு.

## கடிதங்கள்

உலகில் போராடும் மக்களின் உணர்வினை எடுத்துக் கூறுவது என்பது தமிழ் சஞ்சிகையுலகிற்கே இதுவரை தொடர்பற்ற முயற்சி. எமது மக்களுக்கு புதிதான மேற்படி விடயத்தில் ஒவ்வொரு போராட்டம் தொடர்பாகவும் தெளிவான அறிமுகம் இன்றியமையாதது. தளிர் 1 இன் இராணுவக் கிளை வென்றுவரும் சல்வடோர் கொரில்லாக்கள் என்பதும் 2 ன் குவாசப்பா போர் என்பதும் சல்வடோர் விடுதலை போராட்டத்திற்கான அடிப்படைகளைக் கொடுக்கத் தவறிவிட்டன

எமது பிரச்சனைகள் சம்பந்தமாகவும் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடல் விரும்பத்தக்கது. தேர்ந்தெடுக்கப்பட்ட மொழிபெயர்ப்பு கவிகளையும் எதிர்பார்க்கிறேன்.

சாந்தராஜ்—A.
திருகோணமலை

முழுமையாக, இதுவரை எமது மத்தியில் பருவ இதழ் என்ற எண்ணக் கருவிற்கு மாறுபட்ட முறையில் கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் 'தளிர்' முயற்சியை வரவேற்கிறேன் காலத்தின் தேவையையொட்டிய சிந்தனைப் போக்கின் சின்னமாகவே இது தென்படுகிறது.

பெண்கள் ஈடுபாடு குறித்து ஒவ்வொரு இதழிலும் கட்டுரை வெளியாவது வரவேற்கத்தக்கதும், இன்றியமையாததுமாகும். தொடர்ந்து தரமான விடயங்களை எதிர்பார்க்கிறேன்

R S. விக்னகுமார்,
கொழும்புத்துறை

வடிவத்தால், உருவத்தால் மட்டும் 'தளிர்' புதியதல்லாமல் பல புதியஉள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் ரீதியான கட்டுரைகளைத் தாங்கிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகநாடுகளில் நடக்கும் பிரச்சினைகள், போர்முறைகளைப்பற்றி எல்லாம் குறிப்பிடும் நீங்கள், எம்நாட்டில் நடக்கும் அரச பயங்கரவாதம் பற்றியோ, தமிழ்த் தேசியத்தின் பயங்கரவாதிகள் என ஐ.தே.க அரசினரால் கூறப்படும் 'விடுதலைப் புலிகளின்' கெரில்லாப் போர்முறை பற்றியோ குறிப்பிடவில்லை?

எம். மஞ்சுளா,
கண்டுக்குளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

**(1) நிக்கரகுவாவின் ஜனநாயகப்படை - சி. ஐ. ஏ. யின் ஏவல் நாய் ?**

நிக்கரகுவாவின் சன்டினிஸ்டா அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்குடன், ஹொண்டுராஸி லிருந்து புறப்பட்ட 'நிக்கரகுவா ஜனநாயகப் படை (F N D) யினர், நிக்கரகுவாவினுள் முன்னேறிச் செல்வதில் தோல்வி கண்டுள்ளனர். சி.ஐ.ஏ. யின் மிகப்பலமான ஆதரவும் பெருந்தொகையான அமெரிக்க ஆயுதங்களும் இருந்தபோதிலும் 'கொண்டீராஸ்' என அழைக்கப்படும் இப்படையினரால் ஹொண்டுராஸ் எல்லையிலிருந்து நிக்கரகுவாவினுள் அதிக தூரம் முன்னேறிச் செல்ல முடியவில்லை. இவர்களது படையிற் காணப்படும் மிஸ் கிற்றே இந்தியர்கள் போர்புரிவதில் ஆர்வமற்றவர்களாகக் காணப்படுகின்றனர். அத்துடன் சன்டினிஸ்டா அரசாங்கத்தைத் தென் எல்லையில் எதிர்த்துப் போராடிவரும் முன்னுள் சன் டினிஸ்டா புரட்சிவாதியான ஏடன் பஸ்டோரா, 'கொன்ட்ராஸ்' இல் பெரும்பான்மையி னரான சோமோஸா ஆதரவுப் படையினருடன் ஒத்துழைக்க முடியாதென உறுதியாக மறுத்துவிட்டார். 'கொன்ட்ராஸ்' இன் இராணுவப் பிரிவுக்கும், அரசியல் பிரிவுக்குமிடை யில் பிளவு அதிகளவில் அதிகரித்து வருகின்றது. அரசியல் பிரிவினர் சுயவிளம்பரத்தைத் தேடி அலைவதாக இராணுவப்பிரிவு குற்றஞ்சாட்டியுள்ளது. அதேவேளையில் இராணுவப் பிரிவு தான்தோன்றித்தனமாக நடப்பதாக அரசியல் பிரிவு குற்றஞ்சாட்டியுள்ளது. எல் லாவற்றிற்கும் மேலாக 'கொன்ட்ராஸ்' முன்னேற முடியாமைக்கு நிக்கரகுவாவின் மக்கள் ஆதரவின்மையே காரணமாகும். கவிழ்க்கப்பட்ட கொடுங்கோலன் 'சோமோஸா' வின் மறு வடிவமாகவும், சி.ஐ.ஏ. யின் ஏவல் நாய்களாகவும் நிக்கரகுவா மக்கள் ' கொன்ட்ராஸ்' படையினரைக் கருதுகின்றனர். அத்துடன் இன்னொரு உள்நாட்டு யுத்தம் ஒன்று ஏற்ப டுவதை மக்கள் அறவே விரும்பவில்லை.

**(2) பழிவாங்கும் நடவடிக்கையே தூதராலயத் தாக்குதல்**

**ஆர்மீனிய புரட்சிகர இராணுவம் அறிவிப்பு !**

போர்த்துக்கலின் தலைநகரின் லிஸ்பனிலுள்ள துருக்கிய தூதராலயத்தைக் கைப் பற்றி அங்கு கடமையாற்றிய ஒரு பெண்ணையும் அவருடைய மகனையும் ஆர்மீனிய புரட்சி இராணுவம் என தம்மை அழைத்துக்கொண்ட 5 கெரில்லாக்கள் சிறைப்பிடித்தனர். இவர் களுக்கெதிராக போர்த்துக்கல் பொலிசார் தாக்குதலை மேற்கொண்டபோது, கெரில்லாக் கள் தம்மிடமிருந்த குண்டை வெடிக்கவைத்துக் கட்டிடத்தைத் தரைமட்டமாக்கியதுடன் தாமும் உயிரிழந்தனர். இத் தற்கொலைத்தாக்குதலானது ஆர்மீனிய தீவிரவாதிகளால் இருவார காலத்தினுள் நடாத்தப்பட்ட மூன்றாவது தாக்குதலாகும். 68 வருடங்களின் முன்பு துருக்கிய ஒட்டமான் அரசு ஆர்மீனியர்மீது மேற்கொண்ட பாரிய அளவிலான கொலைகளுக்காகப் பழிவாங்கும் நோக்குடனே இத்தாக்குதல் துருக்கியருக்கு எதிராக மேற்கொள்ளப்படுவதாக ஆர்மீனிய புரட்சிகர இராணுவம் அறிவித்துள்ளது. ஆர்மீனி யர் துருக்கியில் வாழும் சிறுபான்மை இனங்களில் ஒன்றுகுமென்பது குறிப்பிடத்தக்கது.

**(3) அங்கோலாவும் யுனிற்ரா (Unita) படையும் ........!**

அங்கோலா அரசுக்கு ஆதரவாக அந் நாட்டில் நிலைகொண்டிருக்கும் கியூபாப் படைகளுக்கும், அங்கோலா அரச படைகளுக்கும் எதிராக, மேற்கு நாடுகளின் ஆதரவு பெற்ற யுனிற்ரா படையினர் தாக்குதல்களை அதிகரித்துவருகின்றனர். கடந்த ஏழு வரு டங்களாக, மறைந்திருந்து தாக்குதல் என்ற ரீதியில் போராடிய யுனிற்ரு படை இப்

(தொடர்ச்சி பின்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இனவாதமும், 1983 இனக்கலவரமும்

— ஜெயந்தன்

1983 ஜூன் 2-ம் திகதி முதல் வவுனியா நகரிலும் திருமலையிலும் ஆரம்பித்த இனக் கலவரம் எதேச்சையாக முகிழ்ந்தெழுந்த தொன்று? அன்றி இலங்கையில் காலத்துக் குக் காலம் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் பாரபட்சமான போக்கினால் இனங்களுக் கிடையே நிரந்தரமான முரண்பாடு ஏற் பட்டு விட்டதென்ற நிரந்தரமான வெளிப் பாடா? என்பதை நாம் ஆய்வு செய்யத் தவறின் 1983 இனக்கலவரத்தின் யதார்த்த நிலையை புரிய முடியாதவர்களாகிவிடுவோம்

சிங்கள தேசிய இனத்தை ஆட்சி செய்த அரசர்களுக்கும் தமிழ்த் தேசிய இனத்தை ஆட்சி செய்த அரசர்கட்கும் இடையே அதிகார போட்டா போட்டி நிகழ்ந்துள்ளன என்பதற்கான சுவடுகள் காணப்படுகின்றன. இவற்றை நாம் இன வேறுபாட்டின் சுவடுகள் எனக் கருத முடி யாது என்பதில் முரண்பாடுகள் இல்லை. இது அரசர்களுக்கிடையேயான அதிகார போட்டா போட்டியின் பதிவுகளேயாகும்.

## இனவாத வித்தின் தோற்றம்

இன வேறுபாட்டின் முதலாவது வித்து பெருந்தோட்டச் செய்கைக்காக 'தமிழ்க் கூலிகள்' இறக்குமதி செய்யப்பட் டதன் மூலமும், மிசனரி கல்வி தமிழ்மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தப் பட்டதன் மூல மும் தான் விதைக்கப்பட்டது. எனக் கருத இடமுண்டு.

சிங்களத் தொழிலாளரின் நிலத்தை அபகரித்தும் மேற்கொள்ளப்பட்ட பெருந் தோட்டச் செய்கையில் ஆசைவார்த்தையை நம்பியும், பலவந்தத்தாலும் தம்மை மலிவுக் கூலிகளாக ஈடுபடுத்தியதன்மூலம் இத்தமிழ்த் தொழிலாளிகள் சிங்களவரின் சினத்தையும், வெறுப்பையும் சம்பாதிக்கநேரிட்டது. தமது ஜீவனோபாய மாகவே தம்மை இந்நடவடிக் கையில் ஈடுபடுத்தினரேயன்றி வேறெந்த ஆக்கிரமிப்பு எண்ணத்துடனும் அல்ல, என்ப தை தெளிவுபடுத்துவதாக அவர்களின் இலங்கை நோக்கிய பயணம் அமைகின்றது. மதுரையில் இருந்து இராமேஸ்வரம் வரையி லான பல நூறுமைல்களையும் நடந்தே வந் தார்கள் என்பதும், பாதையில் கொடிய நோய்களையும் கோர மரணங்களையும் சந் தித்து வாழ்வா? சாவா என்ற வினவுக்கான ஜீவ மரணப் போராட்ட பயணமாகவே மன் னாரில் இருந்து கண்டிவரையான பயணம் அமைந்தது என்பதும் வரலாற்று உண் மைகள்.

அடுத்து மிஷனரி கல்வி முறையின்பால் அதிகம் கவரப்பட்டு அரசதுறைகளில் தமி ழர்கள் தம்மை மேம்பாடுடையவர்களாக மாற்றிக் கொண்டதன் மூலம் சிங்களவரின் பொறாமையுணர்வுப் பார்வைக்கு உள்ளாக் கப் பட்டனர்.

தமிழர்களின் இந்த ஜீவனோபாய நட வடிக்கைகள் சிங்களவரின் அநியாயமான சந்தேகத்துக்குள்ளாக்கப்பட்டன. பொறா மைக் காரர்களினால் உருவகித்து விடப் பட்ட இச் சந்தேக உணர்வு இன விரோத மாக வடிவெடுத்து இன்று மிக வலுவடைந்து நிற்கின்றது. சிங்கள மக்களிடம் எதேச்சை யாக எழுந்து நிற்கின்ற இவ்விரோத உணர்வு முதியோர்—இளைஞர்—குழந்தைகள் ஆகிய மூன்று சாராரையும் ஆட்கொண்டு விட்டது என்ற சந்தேகம் நியாயமானதாகும்.

இன விரோத சிந்தனை மறைய மாட் டாதா? சிங்களத் தலைவர்கள் முதல் சாதா ரண சிங்களவர் வரை இவ்வுணர்வு காணப் படுகின்றதா? என்ற வினவுக்கான விடையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. இலங்கையின் சுதந்திர காலகட்டத்திலும்

II. சுதந்திரத்தின் பின்பும்

ஏற்பட்டு வருகின்ற அரசியல் சமூக நிகழ்வுகள் பகரும் என நாம் எதிர்பார்ப்பது நியாயமானதாகும்.

## முதலாவது இனவாத நடவடிக்கை:-

சிங்களத் தலைவர்களினால் அரசியல் ஆவணரீதியில் புரியப்பட்ட முதலாவது இனவாத நடவடிக்கை சுதந்திர இலங்கையின் தேசியக்கொடி சம்பந்தமானதாகும். இக்கொடி,

I. மக்கள் ஆலோசனைப்படியோ அன்றி மக்கள் சபையின் ஆலோசனைப் படியோ பெறப்பட்டதல்ல. சதியாலோசனைப்படி பெறப்பட்டதாகும்.

II. இக் கொடி இலங்கைக்குள் கொணரப்பட்ட விதம் தேசியக் கொடி என்ற ரீதியில் அல்ல 'சூழ்ச்சிச் சதி' முறையிலானதாகும்.

ஆய்வாளரென்ற ரீதியில் அன்றைய மக்கள் சபையின் பேச்சுக்களை நினைவு கூருவதில் தவறொன்றும் காணமுடியாது.

''வாளேந்திய சிங்கம் பொறித்த கொடியை தேசியக் கொடியாக்க அன்றைய முதன் மந்திரி திரு. சேன நாயக்காவுக்கும் உள்நாட்டு மந்திரி ஒலிவர் குணதிலகா போன்றோருக்கும் யார் அனுமதி வழங்கினார்கள்? எவ்வாறு 50,000 க்கும் அதிகமான வாளேந்திய சிங்கக் கொடிகள் ஏராளமான பணத்தைச் செலவழித்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன'' என்று வினா 19-01-48 அமர்வின் போது சபையில் ஒலித்தது. இதற்கு 'இலங்கையின் தேசியக் கொடி இன்னமும் முடிவுசெய்யப்பட வில்லை அதுபற்றி பின்னர் முடிவுசெய்வோம். இப்பொழுது தருவிக்கப்பட்டுள்ள வாளேந்திய சிங்கக்கொடி அலங்கார வேலைகட்காகவே''. இதன்பின் 'ஏதுமறியாத' சின்னலெப்பை என்ற பிரதிநிதி சிங்கக் கொடியை தேசியக் கொடியாக முன்மொழிந்தார் என 1947 தை மாகத்தில் வெளியான ஈழகேசரி கூறுகிறது. இங்கு 'ஏதுமறியாத' என்ற சொல்லின் உள்ளார்ந்த உண்மை நேரடி தொடர்பு மூலமே பெறப்பட முடியுமானதெனினும் கபட நாடகத்தையே இது குறிக்கின்றது என்பதில் ஐயமில்லை.

(இச் சிங்கக் கொடி உண்மையில் கடைசிச் சிங்கள மன்னனின் கொடியேயாகும்)

## தேசியக் கொடிவிடயத்தில் தமிழர்கள்:

இலங்கையின் தேசியக் கொடியாக சிவனொளிபாத மலையையும் அதன் பின்னணியில் சிவப்பு (வீரம்), மஞ்சள் (ஞானம்) நிறத்தைக் கொண்ட சூரியனை வரையலாம் என்ற கருத்தை தமிழரின் தரப்பில் 16-12-1945 திகதிய ஈழகேசரி மூலம் தெரிவித்த திரு. பாட்டை சாரி என்பவர் இந்துக்களாலும், பௌத்தர்களாலும், கிறீஸ்தவர்களாலும், இஸ்லாமியர்களாலும் கௌரவிக்கப்படும் இம்மலையைப் பற்றி திருவிளையாடற் புராணம் (இந்து) சிலப்பதிகாரம், மணிமேகலை (பௌத்தம்) போன்ற புராதன நூல்களும் குறிப்பிடுவதைச் சுட்டியிருந்தார். இக் கருத்தை பகுதி வித்தியாதிபதியாக இருந்த சதாசிவ ஐயர், தமிழ் பண்டிதர் நா. கந்தையா போன்ற பெரியார்கள் வெகுவாகப் பாராட்டியதாகவும் செய்தி கூறுகிறது. (25-10-48 ஈழகேசரி)

எனவே, தேசியக் கொடியென்பதற்குரிய உயர்ந்தவரையறைகளுடன் முன்மொழியப்பட்ட கருத்து புறக்கணிக்கப்பட்டதும் உயர்ந்தவரை யற்றதும் இனரீதியான சுட்டுதலை முதன்மைப் படுத்துவதுமான வாளேந்திய சிங்கக் கொடி தேசியக்கொடியாக அங்கீகரிக்கப்பட்டதென்பதும், சிங்கள தேசிய இனத்தின் மேலாதிக்கமாகுமென்பதுடன் அன்றைய சிங்களத் தலைவர்களின் 'மட்டரகமான' சிந்தனையோட்டத்தையும் தெளிவுபடுத்துகிறது என நாம் வரையறுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 வது இனவாத நடவடிக்கை:

முக்கியப் படுத்தக்கூடிய 2வது இனவாத நடவடிக்கையானது 1948-ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட குடியுரிமைச் சட்டமாகுமா என்ற வினு இலகுவாக நிராகரிக்கப்படக் கூடியதொன்று. உண்மையில் இச்சட்டம் இனவாத தன்மையுடைய அரசியல் பேராசையின் வெளிப்பாடுதான் என்பது பொருத்தமான கருதுகோளாகும்.

இச்சட்டம் அமுலுக்கு வந்ததன் மூலம் முழுத் தமிழரில் ⅓ பங்கினர் (சுமார் 10 இலட்சம் பேர்) அரசியல் அனுதைகளாகவும் மனிதாபிமான உரிமைகள் அற்றவர்களாகவும் ஆக்கப்பட்டதை புரிந்துகொண்டு கருத்து வெளியிட சிங்களத் தலைவர்கள் பின்வாங்கினுர்கள் என்பது இனவாதம் எத்தனை வலுவுடன் சுவாலை விட்டு எரிந்துகொண்டிருந்தது என்பதைப்பற்றி உறுதிகொள்வதாய் அமைகிறது.

உண்மையில் இச்சட்டத்தின் மூலம் திருப்தியடைந்தவர்கள் என்ருல் 1947 தேர்தலில் நுவரெலியா தொகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய திரு. தொண்டமான் மீதும் அவரது நண்பர்கள் ராஜலிங்கம், ராஜபிரியர் ஆகியோர்மீது ''எங்கள் ஜெயதிலகாவை நீயா தோற்கடித்தாய்'' எனக் கூறி தாக்குதல் நடத்திய கும்பலாகத்தான் இருக்க முடியும். இவ்வின விரோத சட்டம் குறித்து கருத்து வெளியிட்ட இந்திய செய்திப் பத்திரிகைகளான 'தினசரி' இலங்கைக்கு ஓர் எச்சரிக்கையை விடுத்தது. ''இந்தியா செய்த நன்றியை மறந்து இந்தியரை விரட்டிவிடப் பார்ப்பதில் தனக்கு நஷ்டம் எதுவும் இல்லையென்பது இலங்கை சாக்காரின் எண்ணமாயிருக்கலாம். ஆனுல் இந்தியாவின் விரோதத்தால் இலங்கை அடைய நேரும் நஷ்டமும் நாசமும் சாமான்ய மானதல்ல'' (5-12-48 ஈழகேசரி) மேலும், சென்னை ஹிந்து பின்வருமாறு குறிப்பிட்டது:

''இந்தியர்களை நாட்டினின்று வெளியேற்றும் மசோதாவேயன்றி இந்தியர்கட்கு பிரஜாவுரிமை வழங்கும் மசோதாவன்று'' 5-12-48 ஈழகேசரி. இதே திகதிய ஈழகேசரி தனது ஆசிரியர் தலையங்கத்தில் 'சாமான்ய' மனிதத்துவத்தைக் கூட வழங்க சேனநாயக்க மறுப்பதைக் கண்டித்துள்ளது. பின்னர் முதலமைச்சராயிருந்த ஜோன் கொத்தலாவலை ''பிரிட்டிசாரை விட அதிக கெடுதிகளை இந்தியர் இலங்கைக்குச் செய்துள்ளனர்'' என்று குறிப்பிட்டுள்ளமையும்.

### E. R. சேனநாயக்கா

''கட்டுநாயக்க பிரதேசத்தில் அடியெடுத்து வைத்தவர்களை சுட்டுவீழ்த்தும் உரிமை பிரிட்டிசாருக்கு இருந்திருந்தால் நமது நாட்டுக்குள் நுழையும் கள்ளக் குடியேற்றக் காரரை நாம் ஏன் சுட்டுத்தள்ளக் கூடாது'' (07-08-55 ஈழகேசரி) என்று குறிப்பிட்டதையும் கருத்திற் கொண்டு நோக்கின் 1948-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 18-ம் இலக்க சட்டம் சிங்கள இனத்தின் மேம்பாடும் பாதுகாப்பும் கருதி உருவாக்கப்பட்ட இனவாத அடிப்படையிலான தீர்மானமாகும் என்பதில் சந்தேகமில்லை. இத் தீர்மானத்தின் மூலம் சதியாலோசனைகளூடு உருவாக்கப்பட்ட தேர்தல் தொகுதி அமைப்பில் காணப்பட்ட பிரதி நிதித்துவ வாய்ப்பையும் இம் மக்கள் இழந்தனர் என்பதும், சிங்களத் தொழிலாளர்களுக்கும், இந்தியாவிலிருந்து இங்குவந்ததொழிலாளருக்குமிடையே நிலவிய வீணுன சந்தேகத்துக்குள்ளான பகையை புதுவடிவம் பெற்று இனவாதம் வளர துணை போயிற்று என்பதும் கசப்பான உண்மைதான்.

## 3 வது இனவாத நடவடிக்கை:

ஒரு இனத்தின் குரல்வளையை நெரிக்கும் நடவடிக்கையை மூன்ருவது இனவாத நடவடிக்கையாக முன்னிலைப்படுத்தலாம்.

மொழி ரீதியான குரல்வளை நெரிப்பு நடவடிக்கையின் முதலாவது எத்தனம் 1955-ம் ஆண்டு ஜுன் மாதம் முன்மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப் பட்டதாக தெரிகின்றது. கல்விக் கொள்கை பற்றி விசாரணை செய்யுமாறு பணிக்கப் பட்ட மொழி விசாரணை ஆணைக்குழு இலங்கையில் ஒரு மொழிதான் போதனு மொழியாக இருக்க வேண்டுமென்ற அனுவசியமான சிபார்சொன்றைச் செய்ததை கண்டித்து ஆசிரியர் தலையங்கம் எழுதிய ஈழ கேசரி (3—7—55, சிங்களமொழியை அமுல்படுத்துவதுதான் இப்பிரேரணையின் அந்தரங்க திட்டமாய் இருந்திருக்கலாமென்ற அச்சத்தையும் தோற்றுவதாய் அமைந்திருந்தது.

இதற்கு சிலவாரகால இடைவெளியில் கருத்து வெளியிட்ட லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திருமதி குசுமாவதி குணவர்த்தன உட்பட எல்லாச் சிங்களத் தலைவர்களும் சிங்கள மொழிக் கொள்கையை பிரலாபித்தனர். (31—7—55 ஈழ கேசரி) என்பது கவலைக்குரியதே.

இவ்வாறுக மொழி சர்ஜை கிளம்பியிருந்த நேரத்தில் சிங்கள மொழிக் கொள்கையை ஏறறுக்கொள்ள இலங்கையின் தேசியக் கட்சிகளுள் ஒன்றுன ஐக்கிய தேசியக் கட்சி முன்வந்தமை கண்டனத்துக் குரியதாகும்.

இதே காலகட்டத்தில் கொழும்பில் நடைபெற்ற ஆடிவேல் விழா ஊர்தி செல்லும் பாதைகளில் ''இந்தியனே வெளியேறு'' என்ற இனவெறி சுவரொட்டிகள் காணப்பட்டதையும் (14—8—55 ஈழகேசரி), கொழும்பு நகரசபையில் தமிழ்மொழியை எதிர்த்து கதிரைகளை தூக்கிவீசி அட்டகாசம் செய்த பிக்குகள் நகரசபை முன்னல் காணப்பட்ட தமிழருக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களை அடித்துடைத்து சேதப்படுத்தினர் (16—10—55 ஈழகேசரி) என்ற செய்தியும் மொழிரீதியில் அரசியல் வாதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இனவாதம் எவ்வாறு பரவிக்கொண்டிருந்தது என்பதை உறுதிசெய்கின்றன.

மேலே காணப்பட்ட மூன்று இனவாத நடவடிக்கைகளுடுதான் இலங்கையில் நாடளாவிய ரீதியிலான முதலாவது இனக்கலவரம் 1956ல் நடைபெற்றது.

தமிழர் பாரம்பரிய பிரதேசங்களில் அரசின் ஆதரவுடன் அமுல் செய்யப்பட்ட கல்லோயா திட்டத்தின் மூலமும், வேறு அத்துமீறல்கள் மூலமும் தமிழர் பிரதேசத்தை ஆக்கிரமித்த சிங்களக் குடியேற்றக் கொள்கை என்ற நான்காவது இனவாத நடவடிக்கைகளூடு இனவாதமானது தனது இராட்சதக் கால்களை தமிழர் குரல்வளை மீது ஊன்றி மிதித்த சுவடுகளாகத்தான் 1956, 1958, 1961, 1977, 1979, 1981 இனக்கலவரங்கள் அமைந்தன.

1972ற்கு பின் நடைபெற்ற இனக் கலவரங்கள் இலங்கைக் குடியரசில் நிகழ்ந்தவை. இலங்கைக் குடியரசு என்ற பதம் சிங்கள மொழியையும், பௌத்த மதத்தையும் பேணிப் பாதுகாக்கின்ற சட்டத்தை இடுகின்றதாகும். இச்சட்டம் 1972ம் ஆண்டிலேயே முதன் முதலாக உருவாக்கப்பட்டது. இதனை உருவாக்கிய அரசாங்கத்தில் இலங்கையின் இடதுசாரிக் கட்சிகள் எனக் கருதப்படும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி ஆகிய கட்சிகளும் அங்கம் வகித்ததுடன உருவாக்கியும் கொடுத்தனர். இவர்களது காலத்தில்தான் தமிழர் உயர்கல்வியைத் தடைப்படுத்தும் தரப்படுத்தல் அனுமதிமுறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வரையறுக்கப்பட்ட இனவாத அடிப்படையிலான நடவடிக்கைகள் மூலம் சிங்கள மக்களோடு ஊறிவிட்ட தமிழர் எதிர்ப்பு சிந்தனைகளின் உச்சக்கட்ட வெளிப்பாடாகவே அண்மைய கலவரமும் அதைத்தொடர்ந்து அரசியல் தீர்மானமும் அமைகின்றது.

1983 ஜூன் மாதம் ஆரம்பித்த இனக் கவரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் இம்முறை தமிழர்கட்கு எதிரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களும், உரைகளும், பேட்டிகளும் அரசினுல் நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டே இருக்க, இனக்கலவரம் உச்சக்கட்டத்தை அடைந்தது. அரசின் அடக்குமுறையும் உச்சக்கட்டத்தை அடைந்து பிரிவினைத் தடைச்சட்டமாக வடிவமெடுக்கின்றது. இச்சூழ்நிலை எவ்வாறு வளர்ந்ததென நோக்குவோம்.

மே மாதத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 'விடுதலை இயக்கங்கள்' ஏற்படுத்திய மக்கள் ஆதரவுடனுன புரட்சிகரமான வெற்றியினுல் பொறுமையுடணர்வடைந்து பழிவாங்கும் எண்ணத்துடன் தருணம் பார்த்திருந்த இனவெறியர்கள் வவுனியாவில் நடைபெற்ற 'கெரில்லா' தாக்குதலை சாட்டாக காணப் புறப்பட்டது. 02-06-83 அன்று வவுனியா நகர் தீக்கிரையாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறிப்பாக திருகோணமலைப் பகுதியிலும் பொதுவாக இலங்கைத்தீவு பூராவும் இனவாத தாக்குதல்கள் நிகழக்கூடியதொரு பதட்டமான நிலை காணப்பட்டது.

இவ்வாறுன பதட்ட காலத்தில் தான் பொதுமக்களையும் இராணுவத்தினரையும் தமிழர் விரோத செயல்களில் குதிக்கத் தூண்டும் ஒரு தீர்மானமும் ஒரு சட்டமூலமும் முறையே அரசாங்கக் கட்சியாலும் அரசாங்கத்தாலும் நிறைவேற்றப்பட்டன.

(1) "வடபகுதி பயங்கரவாதமானது நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் ஆபத்து மட்டுமன்றி அச்சுறுத்தலுமாகும்" ஐ. தே. கட்சி தீர்மானம், 04-06-83 ஈழநாடு.

(2) "ஆயுதப்படையை சேர்ந்த எவரும் பயங்கரவாதியென சந்தேகிக்கும் எவரையும் சுடலாம். மரணவிசாரணை நடைபெற மாட்டாது. நீதிமன்ற விசாரணைக்கும் உட்படுத்தப்படமாட்டார்கள் சடலங்களை அரசு விரும்பினுல் மட்டுமே உறவினரிடம் மட்டும் ஒப்படைக்கும்" 03-06-83-ல் நிறைவேறிய சட்டமூலம், 04-06-83 தினபதி.

மேலே கூறப்பட்ட தீர்மானமும், சட்டமூலமும் சமகாலத்திலே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தீர்மானத்தின் மூலம் அச்ச உணர்வை ஏற்படுத்தி சிங்கள மக்களை தமிழர்கள் மீது தூண்டிவிடும் முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கின்ற அதேவேளை இராணுவத்தினருக்கு "நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்" எக்கொலையும் புரியலாம் என்ற அனுமதி வழங்கப் பட்டிருக்கின்றது.

இந்த இரண்டு செய்திகளும் பத்திரிகையில் வெளியான அன்று (4-6-83) தான் தாக்குதல் சம்பவங்கள் பரவலாக நடைபெற்றிருக்கின்றன.

இத்தீர்மானத்தின் பின் நிகழ்ந்த இன விரோத செய்திகளை பின்வருமாறு கோவைப் படுத்தலாம்.

05-06-83 (தினபதி):

- ★ நீர்கொழும்பில் கலவரம் உண்டாக்க முனைந்த கோஷ்டி மீது துப்பாக்கிப் பிரயோகம்.
- ★ குருநாகலில் கலவரம். ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலி, 25 கடைகள் தீக்கிரை.
- ☆ மட்டுநகர்-கொழும்பு புகையிரதம் 'கனேவத்தை' என்னுமிடத்தில் தாக்குதலுக்குள்ளானது.

08-06-83:

- ★ பாணந்துறையில் நேற்று உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு.
- ★ நிக்கரவெட்டிய, நாவலப்பிட்டிய பகுதிகளில் பதற்றம்.
- ★ இரத்மலானையில் அப்போதிக்கரி சங்கத் தலைவர் வாள்வெட்டுக்குப் பலி.
- ★ பொல்காவலையில் அசம்பாவிதம், அரசியல்வாதி சம்பந்தமாம்

09-06-83: கறுவாக்காடு தமிழ்க்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின்வீட்டிற்கு கைக்குண்டு வீச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10–06–83 பேராதெனிய பல்கலைக்கழக மாணவர்கள் மீது முகமூடி மனிதர்கள் தாக்குதல்

11–06–83: திருமலையில் கலவரம்.

12–06–83: திருமலை பா. உ. வீட்டிற்கு கைக்குண்டு வீச்சு.

இவ்வாறாக தினமும் இனக்கலவரம் பற்றிய செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்த அதேவேளை 27–06–1983 அன்று திருமலையில் இருந்து யாழ் நோக்கி வந்த தனியார் பஸ்வண்டியொன்று தடுத்து நிறுத்தப் பட்டு பிரயாணிகளுடன் தீயிடப்பட்ட கோரச்சம்பவம் நிகழ்ந்தது. கருகிமாண்டவர் போக, சம்பவம் நடந்த இடத்திலிருந்து எஞ்சியோருக்கு உதவிய திருநாவுக்கரசு என்பவரதும், அவரது மனைவி பிள்ளைகளினதும் சடலங்கள் கருகிய நிலையில் அடுத்தநாள் கண்டெடுக்கப்பட்ட செய்தியுடன் இனக்கலவரம் புதியவேகத்தைப் பெற்று திருமலை முழுவதையுமே கலக்கி நின்ற அதேவேளை திருமலையில் தமிழ்க் கடற்படை வீரர் ஒருவர் சக வீரர்களினால் தாக்கப்பட்ட செய்தியும் வெளியாகின்றது.

இவ்வாறான, செய்திகளை அறிந்தும் அறியாதவர்போல் இருந்த நாட்டின் ஜனாதிபதி அவர்கள் ' டெய்லி டெலிகிராப் என்ற சஞ்சிகைக்கு 12–07–83 அன்று அளித்த பேட்டியில் ''வடபகுதி தமிழ்மக்களின் கருத்தை அறியும் எண்ணம் தனக்கில்லையென்றும் அவர்கள் கஷ்டங்கள் பற்றி அக்கறை கொள்ளத் தயாரில்லை'' என்றும் கூறியது இனக்கலவரம் பற்றி அவர் கொண்டிருந்த சிந்தனைப்போக்கை குறிப்பாக அமைகின்றது.

இதனைத் தொடர்ந்து, இராவணுவத்தால் கொலைசெய்யப்பட்டவர் மரண விசாரணையின்றி புதைக்கலாம்'' எனும் சட்டமூலம் மனிதாபிமானத்திற்கு புறம்பானது என இந்தியா தெரிவித்த கருத்தை திரித்துக் கூறிய அரசாங்கம் பொதுசனத் தொடர்பு சாதனங்களூடே இந்தியா இலங்கைக்கு அச்சுறுத்தலாக அமைகிறது எனவும் அது, தன் உள்விவகாரங்களில் தலையிடுகிறது எனவும் 22–07–83 அன்று திகதி அளவில் பெரும் புரளியைக் கிளப்பி சிங்கள மக்களிடம் காணப்பட்ட பீதியுணர்வை மேலும் தூண்டிவிட அரசாங்கம் பிரயத்தனம் செய்துகொண்டிருந்த வேளை 23–07–83 அன்று 13 இராணுவ வீரர்கள் மீதான கொரில்லாத் தாக்குதல் செய்தியால் பீதியுற்ற சிங்கள மக்கள் தமக்கேயுரிய இனவாதத் தாக்குதலில் குதித்தது ஆச்சரியப்படக் கூடியதொன்றல்ல.

இனக்கலவரத்தை எப்படியாவது உருவாக்கி அச்சுறுத்துவதன் மூலமாவது தமிழ் மக்களை அடக்கிவிட நினைத்து செயற்பட்டு வந்த அரசைப் பார்த்து ஏன் இனக்கலவரத்தை அடக்க முன்வரவில்லை என வினவெழுப்புவது எந்தவகையில்பொருத்தமானதாகும்.

இனக்கொலை நடவடிக்கைகட்கும், அரசுக்கும் என்ன தொடர்பு நிலவியது என்பதைத் தெளிவுபடுத்துவதாக ஆடிமாத இறுதியில் புரியப்பட்ட வெளிக்கடைச் சிறைச்சாலை படுகொலைகள் அமைகின்றன.

''கொலை செய்தவர்களைத்தான் கண்டு பிடிக்க முடியவில்லை என்றால் கைதிகளை அடக்க உடனடி நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளுக்கு என்ன தண்டனை?'' இவ்வாறு ஆதங்கப்படுத்துவது அர்த்தமற்றது. ஏனெனில் கடமையுணர்வுள்ள அதிகாரிகள் கூட (''நல்ல சிங்களவர்) இனவெறிக்குக் கட்டுப்பட்டு வாழும் காலம் இது.

சிறையில் அத்துமீறல்களைச் செய்தவர்கள் சாதாரணக் கைதிகள் என்றால் கைதிகளுக்கென்றோர் பொதுப்பண்பு இருக்குமல்லவா. அதுதான் ''வாய்ப்புக் கிடைத்தால் தப்பியோடுதல்'' என்பது அந்த முயற்சியில் ஒருவர் கூட இறங்கவில்லையா? இவர்கள் உண்மையில் ' விசித்திரமான'' கைதிகள் தான் தர்மத்தை உணர்ந்த கைதிகள் அதர்மத்தை அழிக்க ''தர்மப்போர்'' புரிந்த கைதிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு 24—07—83 அன்று தொடங்கிய திட்டமிட்ட இனக்கலவரத்தால் வடக்கு கிழக்கு வெளியேறியிருந்த தமிழ் மக்கள் எல்லோரும் அகதிகளாக்கப்பட்டு வாடுகின்ற போது இலங்கையின் ஜனாதிபதி நாட்டுமக்களுக்கு விடுத்த செய்தியில் ''பல ஆண்டுகளாக சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையே வளர்ந்துகொண்டு வந்த பகைமை உணர்வு, சந்தேகம் ஆகியவற்றின் விளைவே இது என்றும், 1956 ல் தான் இது முதன்முதல் உருவானதென்றும் கூறிவிட்டு சிங்களமக்களின் நியாயமான கோரிக்கையையும் தேசிய உணர்வையும் மதித்து நாட்டை இரண்டாகக் கூறுபோடும் கட்சியை தடை செய்தார்'',

இங்கே நாம் முக்கியமான முரண்பாட்டை காணலாம் அது பகைமை உணர்வு, சந்தேகம் ஆகியவற்றால் உருவானதான நியாயமான கோரிக்கையோ'' ''தேசிய உணர்வோ'' இருக்குமா? என்பதுதான். பகைமை உணர்வால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை உண்மையில் தேசிய வாதம் தானா?

இவ்வாறான, சம்பவங்கள் உலகையே அதிரவைத்துவிட்ட நேரத்தில் இலங்கைத் தமிழர் நலன் என்ற விடயத்தில் இந்தியப் பிரதமர் இந்திராவின் தலையீடு நியாயமானதாகும். மனிதாபிமான ரீதியிலும், அரசியல் சமூக சூழ்நிலை காரணமாகவும் உருவாகிய இத்தலையீட்டை பாகிஸ்தான் அமெரிக்கா போன்ற இலங்கையின் நட்பு நாடுகள் கண்டித்திருக்கின்றன. இவற்றைக் கண்டு இந்தியா அஞ்சி ஒதுங்குமா? அல்லது எதிரிப் படைகள் இலங்கையில் காலடி எடுத்து வைத்த பின் தான் தன் சுய பாதுகாப்பு பற்றி அங்கலாய்க்குமா? என்பது பதிலளிப்பதில் சிக்கலுக்குரிய வினாத்தான் எனினும் இந்தியாவின் இத்தலையீடு இலங்கைக்கு அளிக்கப்பட்ட சிறு ''அதிர்ச்சி'' வைத்தியம் தான். நோயை முற்றாக குணப்படுத்த நோயாளியோ அன்றி வைத்தியரோ எவர் தயங்கினாலும்; தவறினாலும் பின்னர் ஒருமுறை நோய் வரும்போது அதிர்ச்சி வைத்தியம் பயனளிக்காத சூழ்நிலை உருவாகும்.

## தமிழர்களைக் கொலை செய்வதன் மூலம் வசதியாக வாழலாம்.!

—ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையின் பிரச்சாரம்

27—7—83 அன்றிரவு தார்மீக அரசின் ரூபவாஹினி தொலைக்காட்சிசேவையில் ஒரு சிங்கள் நாடகம் ஒலிபரப்பானது அதன்கரு என்னவெனில், மூன்று நண்பர்களில் இருவர் நேர்மையான வழியில் உழைக்க மற்றவன் களவுகளைச் செய்வதன் மூலம் சம்பாதிக்கிறான்; இவனுக்கு அவனுடைய இரு நண்பர்களும் புத்திமதி சொல்லியும் அவன் கேட்கவில்லை. ஒரு நாள், தமிழ் பெரியார் ஒருவர் அவனுக்கு அறிவுரைகள் சொல்ல அவன் அப்பெரியாரை கொலை செய்துவிட்டு, அவருடைய உடைமைகளையும் சொத்துக்களையும் கொள்ளையடித்துச் சென்று 'நீங்கள் இவ்வளவு நாட்களும் உழைக்க முடியாததை நான் ஒரு தமிழனைக் கொன்றதன் மூலம் சம்பாதித்துவிட்டேன்' என தன் நண்பர்களிடம் கூற அவர்களும் அவனது வழியை பின்பற்றுகின்றனர்;

இதன் வெளிப்பாடு என்னவென்றால் ''தார்மீக அரசில் தமிழர்களைக் கொலை செய்வதன் மூலம் வசதியாக வாழலாம்'' என்பதா ...?

நன்றி — **தமிழின விடுதலை**
இதழ் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸ்—
# நிலச்சீர்திருத்தமும், விவசாயமும்

*[ஜப்பானிய பத்திரிகையாளரான Mutokhiyo என்பவரால் நியூயோர்க் பல்கலைக்கழகத்தில் உரை ஆற்றப்பட்டு, லங்கா காடியன் 1982 ஆகஸ்ட் 15 ந் திகதி இதழில் வெளிவந்த கட்டுரையைத் தழுவியது]*

அமெரிக்க அரசாங்கம் தற்போதும் பிலிப்பைன்சை தம் நாட்டின் ஒரு பகுதியாகவே நினைத்துக்கொண்டிருக்கின்றது. சுபிக் (Subic) கடற்படைத்தளம், கிளாக் (Clark) விமானப்படைத்தளம் எனும் இரு பாரிய தளங்களை இது கொண்டுள்ளது. ஆசியப் பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளுக்கு இவை முக்கியம்வாய்ந்தவையாக இருக்கின்றன. அமெரிக்காவின் பொருளாதார ஈடுபாடு பெருமளவில் இங்கு இடம்பெற்ருலும் அதனைப் பின்னர் ஆராயலாம்.

இதேவேளை ஆசியாவின் மிகவும் முக்கியமான ஆயுதப் போராட்டமும் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ்வகையில் பிலிப்பைன்ஸ் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் (C P P) ஆயுதப்பிரிவாக புதிய மக்கள் இராணுவம் (N P A) இருக்கிறது. இது ஏற்பட்டு மூன்று வருடத்தில் பலம் பெற்றதாகியது. அநேகமாக வருடத்திற்கு இருதடவைகள் நான் அங்கு போயிருக்கிறேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிலைமை மாற்றமடைந்து இருக்கும். மாஸ்கோ சார்பு அமைப்பிலிருந்து 1968ல் Jose Maria Sison) தலைமையில் C P P யில் இருந்து பிரிந்த சில இளம் அங்கத்தவர்கள் மாவோயிச கம்யூனிச கட்சியை அமைத்துக்கொண்டார்கள். 1969ல் இக் கம்யூனிசக் கட்சியின் இயக்குதலின் கீழ் லுசென் வடபகுதியில் 50க்கும் 60க்கும் இடைப்பட்ட தொகையினரால் N P A உருவாக்கப்பட்டது. சுதந்திரப் பிரதேசங்களை ஏற்படுத்துவதில் அவர்களின் ஆரம்ப முயற்சியின்போது தோல்வியையும் பலத்த சேதத்தையும் அடைந்தார்கள். இத் தோல்விக்குப் பின் தம் தந்திரோபாயங்களை மாற்றிக்கொண்டனர். மக்களிடம் ஆழமாக ஊடுருவி வேலை செய்வது எனவும் வெகுஜன ஆதரவைக் கட்டியெழுப்புவது எனவும் தீர்மானித்தனர். 1976ல் N P A தலைமைப்பீடத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். இதனல் இளம் அங்கத்தவர்கள் தலைமைப் பீடத்தைச் சென்றடைந்தனர். இவர்கள் சுயவிமர்சனத்தில் ஈடுபடுவதைக் குறைத்துக் கொண்டதுடன் தேசிய ரீதியிலான தீர்மானங்களை எடுத்த மத்திய கமிட்டியிடமிருந்து தீர்மானம் மேற்கொள்வது பன்முகப்படுத்தப்பட்டது. அதாவது மாகாண அமைப்புக்களும் தீர்மானங்களை மேற்கொள்வதில் ஈடுபடுத்தப்பட்டன. இம் மாற்றம் பெருவெற்றியைத் தந்தது.

இன்று N P Aக்கு சுதந்திர வலயங்களும் இருக்கின்றன. ஆயினும் இப் பிரதேசத்தில் இராணுவம் நுழையமாட்டாது என்பது தவருகும். கிராமங்களில் (harrios) N P A அமைக்கப்பட்டிருப்பினும் அவை மறைமுகமாகவே இயங்குகின்றன. விவசாயிகள் சிலர் இதில் சேர்கிருர்கள், சிலர் வேறு இடங்களுக்குச் சென்று தாக்குதல் நடாத்தும் பிரிவிலும். சேர்ந்துகொள்கின்றனர். மார்கோசுக்கு (Marcos) வாக்களிப்பதனுலும் அவருக்கு ஆதரவான சுவரொட்டிகள் ஏற்றுக்கொண்டு தம் கிராமத்துச் சுவர்களில் ஒட்டப்பட்டிருப்பதாலும் இங்கு N P A இயங்கிவருகின்றது என்பதை கண்டுகொள்வது முடியாததாயிருக்கின்றது. தகவல் கொடுக்கமுற்படுவோருக்கு கடுமையான தண்டனை கொடுக்கப்படுவதால் அவர்கள் வாயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிக்கொண்டு நடப்பதை பேசாமல் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டியுள்ளது. இரவுகளில் விவசாயிகள் ஒன்றிணைந்து இன்னோர் பிரதேசத்துக்குச் சென்று தாக்குதல் நடத்திவிட்டு இரவோடிரவாகவே வந்து சேர்ந்துவிடுவர். இதன்போது தம்மைக் கண்டுபிடித்துவிடும்படியான எத்தகைய அடையாளத்தையும் விட்டுவைப்பதில்லை.

**அரசியற் போதனை.**

N P A தன் போராட்ட நடவடிக்கையில் அரசியல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. தேவாலயங்களும் வண. பிராங்கொயிஸ் (Francois) போன்ற குருமாரும் இதற்கு உதவிவந்துள்ளனர். அங்கு அநேக தேவாலய மக்கள் பொது மக்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு Barrio இல் வாழ்ந்து வருகின்றனர். இங்கு அனேக குருக்கள் பைபிள்வகுப்புகள் மூலமாக வர்க்க ஆய்வினை மேற்கொள்கின்றனர். கல்விக்கான நுட்பங்கள் சீனப்புரட்சியிலிருந்து சுவீகரிக்கப்பட்டன. கருத்தரங்கடிப்படையில் நடைபெறும் இக்கல்வி விவசாயிகள் மத்தியில் நல்ல தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. "Tools of analysis', 'MicroMacro analysis,' 'Class analysis' என்ற பெயரில் இவை நடந்தன. அங்கு பாட்டுக்களும் கூத்துக்களும் நடைபெறும். கொக்கக்கோலா அருந்தப்படும் Micro ஆராய்ச்சிக் கல்வியானது கிராமத்தின் பொருளாதார அடிப்படைகள், உடமைகள் இருப்பிடம், அதிகார இருப்பிடம் ஆகியவற்றின் ஆரம்பமாகும். கிராமங்களில் காணப்படும் வர்க்க அமைப்புப்பற்றிய கல்வியானது பிரதேசரீதியாக, தேசிய ரீதியாக மார்க்கோஸ் சர்வாதிகாரம் என்றுகி சர்வதேசிய ரீதியாக விரிவுபடுத்தப்பட்டு பல்தேசியக் கம்பனி, ஐக்கிய அமெரிக்காவின் ஏகாதிபத்தியம் பற்றியெல்லாம் போதிக்கப்படும். சுய விமர்சனங்களாலும் உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள மக்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது. கல்வித்திட்டமானது ஆரம்பிப்போருக்கான பாடம், 'உள்ளகப்பாடம்' 'வளர்ச்சிப் பாடம் என போதிக்கப்படுகிறது.

**யுத்த தந்திரோபாயங்கள்.**

N P A தன்னை மாவோயிஸ் எனக் கூறிக்கொள்கிறது. ஆனால் சீன சார்பாக நடந்துகொள்வதில்லை. இவர்கள் தம் புரட்சி யுத்தத்தை 3 கட்டங்களில் நடத்துகின்றனர்கள். தற்பாதுகாப்பான யுத்தமுறை, சிக்கலை ஏற்படுத்தும் அல்லது ஸ்தம்பிதப்படுத்தும் யுத்தமுறை, முறையான தாக்குதல்கள் முறையிலான யுத்தமுறையாக இவை இருக்கின்றன. முதலாவது கட்டம் மேலும் இரு உபகட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. புராதன யுத்த முறையாகவும் முன்னேற்றகரமான நவீன யுத்தமுறையாகவும் அது அமைந்து காணப்படுகின்றது. தற்பாதுகாப்பு யுத்தத்தில் புராதன முறையிலிருந்து நவீனமுறைக்குச் சென்றுகொண்டிருப்பதாக கூறுகிறார்கள். சில அறிக்கைகள் 6000-7000 கெரில்லாக்களும் அவர்களுக்கு ஆதரவானோர் தொகை 20000 ஆகவும் இருப்பதாக கூறுகின்றது. அதேவேளை News week சஞ்சிகை 10000 கெரில்லாக்கள் இருப்பதாகக் கூறுகிறது. பிலிப்பைன்ஸ் ஹோ - சி - மின் உடைய படைப்பலத்திற்கு சமமான பலத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆயினும் நன்றாக ஆயுதம்தரித்த கெரில்லாக்களை NPA கொண்டுள்ளது. ஆயுதங்கள் அமெரிக்கப் படையினரிடமிருந்தும் மிந்தனு தேசிய முன்னணியிடமிருந்தும் கொள்வனவு செய்யப்படுகின்றது. இவ்வியக்கம் MNLF மொரோ இயக்கம் என வழங்கப்படுகின்றது. மொரோ இயக்கங்களில் ஒன்று சுதந்திரத்திற்காகவும் மற்றது சுய ஆட்சி உரிமைக்காகவும் போராடி வருகின்றது. தமது நிலம் சம்பந்தப்பட்ட போராட்டங்களுக்கு இவ்விரு (NPA, MNLF) இயக்கங்களும் பிராந்திய அடிப்படைகளில் இணைந்து செயலாற்றுகின்றனர். சுமார் 60$ செலவில்சிறந்த சுழல் துப்பாக்கிகளை அமெரிக்க சேவையாளர்களிடமிருந்து இவர்களால் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

N P A பாரம்பரியமாக வடலுசென் பிரதேசத்தில் வலிமை பெற்றிருப்பினும் தம் செயற்பாடுகளை மிந்தனோவில் மிக நன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்துள்ளார்கள். தற்போது மிகக் கூர்மையான எதிர்ப்புக்கள் இங்கு கிளம்பியுள்ளன. தென்லுசெனில் பலத்த மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் முக்கியமானது NPA நாடு முழுவதும் செயற்படுவதாகும். சில சந்தர்ப்பங்களில் சிறிய நகரங்களைக் கைப்பற்றுவதுடன் அதைத் தம் கீழ் வைத்திருக்கவும் முடிந்திருக்கின்றது. இங்கு எல்லா உத்தியோகத்தரும் கூடத் தெரிந்திருப்பதும் கவனிக்கத்தக்கது. NPA தாம் இரண்டாவது உபகட்டத்திற்குச் செல்லும்போது தனித்தியங்கும் சிறிய நகரங்களைக் கைப்பற்றி அதில் தம் அதிகாரத்தை நிலைநிறுத்தலாம் என நம்புகின்றது. இதேவேளை NPA இன் அரசியல் பிரிவான தேசிய ஜனநாயக முன்னணி (N D F) ஐக்கியப்பட்ட குழுக்களையும் சர்வதேசரீதியாக பேச்சாளரையும் கொண்டுள்ளது.

## இராணுவமயமாதலும் அடக்குமுறையும்

அடக்குமுறைக்கான வழிமுறைகள் பலவிதமானவை. வட்டிக்குக் கடன் கொடுப்போரும், செல்வந்த நில உடமையாளர்களும், தனிப்பட்ட ஆயுதப்படைகளும் இராணுவ ரீதியாக இருக்கின்றன. இப்படைகைத்துப்பாக்கிகளைக் கொண்டுள்ளது. மேலும், பிலிப்பைன்ஸ் ஊர்க்காவற்படை கெரில்லாக்களுக்கு எதிரான ஒரு படையாகும். இதற்கடுத்ததாக இராணுவமும் பொலிஸாரும் வருகின்றனர். இங்கு தென் கொரியாவினைப்போல முழுச் சமூகமும் இராணுவமயப்படுத்தப்படுகிறது. இதற்கு Salvage (பாதுகாத்தல்) என்ற புதிய ஒரு சொல் பிரயோகிக்கப்படுகிறது. இந்த இராணுவமயப்படுத்தலின் போது, கடத்தலும் சித்திரவதைகளும் கொலைகளுமே நடக்கிறது. இதனைச் செய்த குற்றவாளிகள் வேறுயாருமல்ல இராணுவமும் பொலீசுமே. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் 'பாதுகாப்பு மனைக்கு கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். பின்பு கொலைசெய்யப்படுகிறார்கள். இறந்த உடலை தெருவில் போடுகிறார்கள். பத்திரிகைகளில் NPA யும் பாதுகாப்புப் படைகளும் மோதிக்கொண்டன என செய்தி வருகின்றது. தனிப்பட்டோருக்கு அல்லது பண்ணைக்குச் சொந்தமான மனைகளை வாடகைக்கு அமர்த்தி பாதுகாப்பு மனைகளாக்கப்படுகின்றன. பொலீஸ் நிலையங்களில் நடைபெறக்கூடிய சித்திரவதைக்குப் பயந்து உரிமையாளர் இதனைக் கொடுத்துவிடுகின்றனர்.

இத்தகைய அச்சுறுத்தல் பிரதானமாக விவசாயிகளுக்கு எதிராகவே இருக்கின்றது. ஏனெனில் பல்தேசியக் கம்பெனிகளின் (MNC) முதலாளித்துவ விஸ்தரிப்பிற்கு நிலங்கள் அவசியமானவையாக இருக்கின்றன. அவை தாம் சுவீகரித்த நிலங்களை கூட்டுப்பண்ணை முறையிலானவை என அழைத்துக்கொள்கின்றன. இப் பண்ணைகள் நெற்செய்கையிலும் பழச் செய்கையிலும் ஈடுபட்டு பெரும் இலாபத்தைச் சம்பாதிக்கின்றன. இந் நாட்களில் விவசாயிகள் பெரும் நிலம் இருப்பதை ஒரு சாபக்கேடாகக் கருதுகின்றனர். ஏனெனில் விவசாயிகளிடம் நிலம் இருப்பின் இராணுவத்தினரின் தொல்லைகளுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. குறிப்பிட்ட நிலப்பகுதி கம்பெனியொன்றுக்கு தேவைப்பட்டால் ஆயுதம் தரித்த மனிதர்களால் அப்பகுதியிலுள்ள கிராமத்தோரது வீடுகளுக்கு தீயிடப்படுகின்றன இவ்வாயுத மனிதர் உள்ளூர் பொலிஸ் தலைமையதிகாரியுடனும், கம்பெனி மனேஜருடனும் தொடர்புகளை வைத்திருப்பர். விவசாயிகள் தம் நிலங்கள் மீதான சட்ட உரிமைகோர முற்படுவரேயானால் நிலங்களின் பெயர்கள் மாற்றப்பட்டுவிடும். மிகப்பெரிய பல்தேசிய கம்பெனிகளான 'போட்' 'கவசாக்கி' போன்றன இதில் ஈடுபட்டிருக்கின்றன. கவசாக்கி நிறுவனம் 15 சதத்தை 1 சதுரமீற்றருக்கான நஷ்டஈடாக வழங்குகின்றது.

இத்தகைய இராணுவ மயமாதல் முதலாளித்துவத்துக்கு பிரதானமாக வெளிநாட்டு முதலீடு நிகழ்வதற்கே துணைபோகின்றன என்பது தெளிவு. கிராமியப் பிரதேசங்களில் பிரதான முரண்பாடு முதலீட்டிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் விவசாயத்துறைக்கு மிடையிலேயாகும். இவ்வாக்கிரமிப்பாளர் வெளியேற்றப்பட்ட விவசாயிகள் நகரப்புற சேரிகளில் குடியேறி பெருகிவிடுவர் என்பதால் நகரப்புறங்களில் தீவிரமாக கண்காணிப்பை மேற்கொள்வர். ''கீழைத் தேசங்களை ஒளிமயப்படுத்தும் ஏற்றுமதி' என்பதே புதிய தொழில்மயப்படுத்தல் கொள்கையின்பிரதான தோற்றமாகும். ஏற்படுத்தப்பட்ட சுதந்திர வர்த்தக வலயத்தில் முதலில் நுழைந்தது 'போட் கம்பனி' ஆகும். இதன் பின்னர் ஜப்பான், மேற்கு ஜேர்மன் நாடுகளைச் சேர்ந்த கம்பனிகள் உட்பட 100க்கு மேற்பட்டவைகள் இங்கு வந்து சேர்ந்தன.

பாரம்பரிய தொழிலாளர் இயக்கங்கள் தொழிற் சங்கங்கள் ஆகியவை 'கம்பனி யூனியன்' களாக மாற்றப்பட்டன. 1980-ல் மே தினத்தன்று குறிப்பிடத்தக்க ஒரு சம்பவம் நிகழ்ந்தது. 30000 பேர்கொண்ட ஊர்வலம் ஒன்று மணிலா வீதி வழியாக சென்றுள்ளது. May First Movement K M U என்ற புதிய தொழிற்சங்கத்தை ஆரம்பித்தது. இது பாரம்பரிய தொழிற்சங்கங்களில் இருந்து வேறுபட்டது. இத் தொழிற்சங்கம் அரசியல் பொருளாதார கோரிக்கைகளை முன்வைத்தது. இப் புதிய தொழிலாளர் வர்க்கம் கீழைத்தேய ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர் முதன்மை பெற்றிருக்கும் தொழிலகங்களிலிருந்து எழுச்சி பெற்றது. அதேவேளை ஏற்கனவே கிராமங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தன. எனவே Politicized KMU தேசிய ஜனநாயக முன்னணியைப் பின்பற்றக்கூடிய தாயிருந்தது.

### தற்போதைய நிலைமையும் எதிர்கால எதிர்பார்ப்பும்

1981-ம் ஆண்டு மார்க்கோஸ் 'இராணுவ சட்டத்தை' வாபஸ்பெற்று சாதாரண நிலையை ஏற்படுத்தினர். இந்த நடவடிக்கை பெயரளவிலேயே இடம்பெற்றது. ஏனெனில் 'பாதுகாத்தல்' (Salvaging) நடவடிக்கை இன்னும் முடுக்கிவிடப்பட்டது. N P A யும், NDFம் ஜனாதிபதித்தேர்தலை பகிஷ்கரித்தன. மக்களில் 68% ஆனோர் தேர்தலைப் பகிஷ்கரித்தனர். இத்தகைய பகிஷ்கரிப்பு போராட்டம் மூலம் NDF வெளிநாடுகளை ஈர்த்துக் கொண்டது. 1972-ல் இராணுவச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்ட பின்பு தேசிய ரீதியாக நடைபெற்ற முதல் அரசியல் நடவடிக்கையாக இது இருந்தது. 'Compact' எனப்படும் திட்டத்தின் அடிப்படையில் அமெரிக்க மார்க்கோ ஏகாதிபத்தியத்திற்கு எதிரான முன்னணி அமைக்கப்பட்டது. இதில் செனட்டர்களும் இருக்கக் காணப்பட்டனர். இச் சக்திகள் முதலில் மார்க்கோசுக்கு எதிரானதாகவே ஒன்றுபட்டன. பின்னர் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக குரலெழுப்பின. ஆயினும் பழைய மொஸ்கோ சார்பு கம்யூனிஸக் கட்சியும் சமூக ஜனநாயகவாதிகளில் வலது சாரிகளும் இணையாதது ஆச்சரியமே. கம்யூனிஸக் கட்சி தற்போதும், இராணுவ சட்டம் அமுலாக்கப்பட்டதையே ஆதரிக்கிறது. இவற்றுக்கிடையில் NPA நிக்குரகுவா அனுபவத்தை நன்கு கற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. இன்னும் 5-6 வருடங்களில் N P A 'Statemate Strategic' என்ற இரண்டாவதுநிலைக்குச் சென்றுவிடும். மார்க்கோஸ் இப்போதே தனிமைப்படுத்தப்பட்டுவிட்டார் என அவர்கள் கூறுகின்றனர். NPA இரண்டாவதுகட்டத்தை அடையும்போது அமெரிக்க இராணுவம் ஆக்கிரமிப்பில் ஈடுபடும் என எதிர்பார்க்கின்றனர். அதற்காக இப்போதே முகங்கொடுக்கத் தயாராகும் நோக்குடன் சர்வதேச தொடர்புகளை வலுப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொன்காடா தாக்குதல்-
# கியூபாப் புரட்சியின் ஆரம்பம்

புல்கென்ஸியோ பாடிஸ்டா என்ற இராணுவ அதிகாரியின் ஆட்சியில், கியூபா மக்களால் தமது வாழ்வின் முன்னேற்றத்திற்கான எவ்வித அனுகூலங்களையும் உணர முடியவில்லை. ஏனைய லத்தின் அமெரிக்க நாடுகளைப் போல், கியூபாவிலும் மக்களிடையே பரந்த அளவில் காணப்பட்ட வறுமை, கல்வியறிவின்மை, வேலைவாய்ப்பின்மை, சுகாதாரச் சீர்கேடு என்பவற்றுடன், நாடு தழுவிய அளவில் மலிந்திருந்த ஊழல், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்காக நாட்டை விற்றுவிட்ட நிலை என்பனவும் காணப்பட்டது. அமெரிக்க பெருமுதலாளிகளும், அவர்களுக்கு ஆதரவாக அமெரிக்க இராணுவமும் கியூபாவின் சகல மட்டங்களிலும் தமது பிடியை அழுத்தமாகப் பதித்திருந்தன. மிகக்கடுமையான இராணுவ அடக்குமுறை நிலவியபோதிலும், மக்கள் அரசினை எதிர்த்து வீதிகளில் இறங்கினார்கள். ஆனால், கியூபாவிலிருந்த எந்தவொரு முதலாளித்துவக் கட்சியும் மக்களுக்கு உதவ முன்வரவில்லை. பெரு முதலாளிகளின் நலன்களைக் காப்பாற்றுவதற்காக இராணுவம் மக்கள் மீது கற்பழிப்பு, கொள்ளையடல், தீ வைத்தல், கொலை செய்தல் என்பவற்றில் பெருமளவு ஈடுபட்டது.

இந்நிலையில், ஆடி 26—1953 இல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமொன்று இடம் பெற்றது. கியூபாவின் கிழக்கெல்லை மாகாணத்தலைநகரமான சண்டியாகோ டி கியூபாவில் அமைந்திருந்த மொன்காடா படைத்தளத்தின் மீது "ஃபிடெல் காஸ்ட்ரோ" தலைமையில் புரட்சியாளர் தாக்குதலை மேற்கொண்டனர். இப்படைத்தளம் கியூபாவிலிருந்த இரண்டாவது மிக முக்கியமான படைத்தளமாக இருந்ததுடன் ஆயிரத்துக்கு அதிகமான இராணுவ வீரர்களையும் கொண்டிருந்தது. கொடுங்கோன்மைக்கும், அடக்குமுறைக்கும் எதிராக ஆயுதம் ஏந்திப் போராடுவதே ஒரே வழி என உணர்ந்திருந்த ஃபிடெல் காஸ்ட்ரோ திடீர்த் தாக்குதலின் மூலம் பெறப்படும் ஆயுதங்களை மக்களுக்கு வழங்கி, அவர்களை கிளர்ந்தெழச் செய்வதனூடாக அடக்குமுறையிலிருந்து விலகி சுதந்திரக்கொடியை கையிலேந்தவும், நாட்டின் முக்கிய நலன்களைப் பாதுகாக்கவும், தாய்நாட்டின் பெருமைக்காகவும், மகிழ்ச்சிக்காகவும் தனது உயிரையும் பணயம் வைக்க வேண்டுமென்ற மகத்தான கோட்பாட்டின் கீழ் அணிதிரள வைப்பதுவுமே இத்தாக்குதலின் நோக்கமாகும்.

ஆனால், துரதிர்ஷ்டவசமான தவறொன்றின் விளைவாக அந்தப்படையில் சிறந்த ஆயுதங்களைக் கொண்டிருந்த பாதிப் போராளிகள் நகரத்தின் நுழைவாயிலில் திசை மாறிப் போய்விட்டதாலும், படைப்பிரிவைப் பிரிப்பதில் ஏற்பட்ட தவறாலும், தற்செயலாக அவர்கள் வந்த வாகனம் காவல் நிலையத்தின்மீது மோதியதால் படைமுகாம் எச்சரிக்கை செய்யப்பட்டு தம்மை தயார்படுத்தும் நிலைக்குட்பட்டிருந்ததாலும் மொன்காடாத் தாக்குதல் இராணுவ ரீதியாகத் தோல்வியடைந்தது. தாக்குதலில் ஈடுபட்ட பலதோழர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு, சித்திரவதைக்குள்ளாகி கொலைசெய்யப்பட்டார்கள். **"இவர்கள் இராணுவ நிபுணர்களல்ல; ஆனால் அவர்கள் இராணுவ தளபதிகளின் கூட்டம் முழுவதற்கும் பலத்த அடி கொடுக்கக்கூடிய அளவிற்கு தேசபக்தி அவர்களிடம் இருந்ததென"** ஃபிடல் அவர்களின் நினைவுக்கு செலுத்தும் அஞ்சலியாகக் கூறுகிறார். "கியூபாவின் சுதந்திரத்திற்

(தொடர்ச்சி 17-ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செசில் ராஜேந்திரா' அடக்குமுறையின் எதிர்ப்புக் குரல்

உலகளாவிய ரீதியில் சிறந்த கவிஞராகப் பாராட்டப்படும் ராஜேந்திரா மலேஷியாவி லுள்ள பெனுங் என்னுமிடத்தில் பிறந்தார். லண்டனில் சட்டக்கல்வி பயின்ற காலத்தில் இங்கிலாந்தில் காணப்பட்ட நிறவெறியினால் பெரிதும் பாதிப்புக்குள்ளானார். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்கக் கவிஞர்களின் கூட்டமைப்பொன்றை லண்டனில் ஏற்படுத்தி மூன்றும் உலகநாடுகளின் கவிஞர்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஏற்பட வழிவகுத்தார். நான்கு ஆண்டுகளை இங்கிலாந்தில் கழித்தபின்னர், கடும் கட்டுப்பாட்டுள்ள பத்திரிகைத்துறையைக் கொண்டுள்ளதும், அவசரகாலப் பிரமாணங்கள் சகலதும் அடங்கிய உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தினால் நிரந்தரமாக ஆளப்படுவதுமான தனது தாய்நாட்டிற்குத் திரும்பினார். நாடு திரும்பியவுடன் அடக்குமுறையை நேரடியாக எதிர்க்கத் தொடங்கினார்.

"சாதாரண மக்களது வாழ்க்கையின் பிரதிபலிப்பாக எனது கவிதைகள் உரத்து ஒலிக்கவேண்டும்" என விரும்பும் ராஜேந்திரா உலகம் முழுவதும் கடல்போற் பெருகியுள்ள அநீதிகளை வெளிச்சமிட்டுக் காட்டுகிறார். 'கலை கலைக்காகவே' எனக் கூறிக் கைதட்டல் வாங்கிக்கொண்டு பாதுகாப்புப் புகலிடங்கள் தேடிக்கொள்ளும் கவிஞர்களிடமிருந்து ராஜேந்திரா பெரிதும் வேறுபடுகிறார். "எந்தக் கலைஞனாவது உயிராபத்துக்களை எதிர்நோக்க அஞ்சுவானாகில், அவன் காப்புறுதிப் பத்திரங்களை விற்பனை செய்துகொண்டிருப்பது மேலானது" எனவும் சாடுகிறார்.

இவரின் கவிதைகள் உலகம் முழுவதும் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் அவரது சொந்த நாட்டில் அவர் ஓர் உண்மையான மலேஷியக் கவிஞரென இன்னமும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை, "எனது புத்தகங்கள் கிடைப்பது மிகக் கடினமாக உள்ள இடம் எனது தாய்நாடே" எனக் கூறும் ராஜேந்திரா மலேஷிய அரசுக்கு மிகவும் பிரச்சினைக் குரியவராகத் தென்படுகிறார். அவரது புத்தகங்கள் நாட்டுக்குள் வருவதை மறைமுகமாகத் தடைசெய்யும் மலேஷிய அதிகாரிகள், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சிறிதுகாலம் அவரைத் தடுப்புக்காவலிலும் வைத்தனர்.

மலேஷியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டித்து அவர் எழுதிய "Animal & the Insect act" என்ற கவிதையின் மொழிபெயர்ப்பைக் கீழே தருகிறோம்.

அந்தக் காட்டில்......
இறுதியாக —
பூரண பாதுகாப்பிற்காக
அவசரகால
ஒடுக்குமுறை
சட்டமானது

இதன் கீழ்
இரண்டிலும் அதிகமாய்
ஆடுகள், மாடுகள்
எருமைகள் எதுவுமே
மந்தைகளாக
புல் மேய்வது
தடைசெய்யப்பட்டது.

சட்ட விரோதமாய்ப்
போயின — அந்த
பறவைகள் கூட்டமும்
தேனீக்கள் பறப்பதும்
முன் கூட்டியே
அனுமதி பெறாது
எழுப்பிய கூடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக்கலேய
எச்சரிக்கை வந்து சேர்ந்தது
குளவிகளுக்கும்— தூக்கணங்
குருவிகட்கும்

உத்தியோக பூர்வ 'ஒலிபரப்பு'
அனுமதிப்பத்திரம்
ஒன்று இல்லாத வரையில்
காலேப் பிரார்த்தனேகளேக் கூட
நடத்த முடியாது.
மைனக்களும்,
குரங்குகளும்
மௌனமாயின.
இப்படியான 'ஒலிபரப்புகள்'
இந்த அவசரகாலத்தில்
கெடுதியான பயங்களே
விளேப்பதாய்
விவரிக்கப்பட்டது.

மரத்தைக் கொத்தும்
மரங்கொத்தி கூட
செண்பக மரத்திலிருந்து
தென்னேமர உச்சிக்கு
சங்கேத மொழிகளால்
செய்தி கூறுவதாய்
சொல்லப்பட்டது.

சொல்லப் போனல் —
எல்லாச் செய்தியும்
தணிக்கைக் குழுவினல்
தகுந்த பரிசீலனேக்குள்ளாகிப்
போயின.

கூட்டமாய்ச் சேர்ந்து
குலவிக் கதைத்த கிளிகள் யாவும்
கூட்டமாயே
கைது செய்யப்பட்டன.
சட்ட விரோதமாய்
கூட்டம் போடுவதாய்
சந்தேகப்பட்டு
பூனேகள் யாவும்

முன்னிரவு —00 மணிமுன்
உரிய இடத்தை
சேரும்படி
கோரப்பட்டன.
சூழலே உணர
உணர்கொம்பு கொண்ட
தத்துவெட்டிகள்
யாவும்
அந்த உணர்கொம்புகளே
பயன்படுத்தாது—கீழே விடும்படி
பயமுறுத்தப்பட்டன.

குறித்த சிலவேளேகளில்
பறவை இனங்களாம்
வாத்துகளும்,
வான் கோழிகளும்
கத்த மறந்தன — அல்லது
கத்த மறக்க வைக்கப்பட்டன.
எல்லா நாய்களின் வாய்களும்
'அல்சேஷன்கள்'
'டாஷ்சன்ட்கள்'
இன்னும் இப்படி...... அந்த
சின்ன இன நாய்கள்
'சிக்காகுவா'வின்
வாய் கூட
அடைக்கப்பட்டன — அவை
குரைக்க மறந்தன.

பாதுகாப்பிற்கு
பாதகமானதால்
'பென்குவினி'னதும்
'வரிச்குதிரை'யினதும்
உடற் போர்வைகள்
வலோத்காரமாய்
களேயப்பட்டன — அல்லது
களேயப்படும்படி
கேட்கப்பட்டன.
மான்கள் கொம்புகளே
இழந்தன.
புலிகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலி சார்ந்த ஊனுண்ணிகளும்
பயங்கர ஆயுதங்களின்
உறைவிடம் ஆனதால்
விசாரணையின்றி
விரிந்த சிறையுள் நேரடியாகத்
தள்ளப்பட்டன.
சட்டத்தொகுதி (4)
பந்தி 2 (b) — உபபிரிவு (16) ன் கீழ்
எந்தச் சூழ்நிலையிலும் - யானைகள்
காற்றை வெளியிட
அனுமதிக்கப்படவில்லை
அங்ஙனமாக,
அவை வெளியேற்றிவிட்டால்
அதுவும்-ஒரு துப்பாக்கி வேட்டாய்
அறியப்பட்டது – இதனால்
அமைதி குலைந்து – கலகம்
விளையலாம் என்றது சட்டம்!

ஆக,
சட்டம் அமுலாகி – சில மாதம்
ஆனபின்பு இயற்கை மறைந்து
விநோதமான மயான அமைதி
காட்டைக் கைவிலங்கிட்டது.
பறவைகளும், பூச்சிகளும்
தெற்கு நோக்கிப் பறந்தன.
விலங்குகள் விரைந்தன.
வடக்கு நோக்கி .....

இப்போ – எதுமே அற்ற
அந்தக் காட்டில் பூரண பாதுகாப்பு
நிலவுவதாக
சொல்லப்படுகிறது ... ?

## மொன்காடா தாக்கு .. ...

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

காக நாங்கள் போராடத் துவங்கினோம்; அதற்காக நாங்கள் அவமானப்படத்தேவை யில்லை'' என அவர்கள் குற்றவாளிக் கூண் டில் நின்றுகொண்டு அறிவித்தார்கள். அவர்கள் சுதந்திரத்தை விரும்பியதற்காக அவர்களது வீடுகளிலிருந்து பிரிக்கப்பட்டு, கொடுஞ்சிறையிலடைக்கப்பட்டனர். எனி னும், ஆயுதமேந்திப் போராடுவதிலுள்ள நியாயத்தினை இத்தாக்குதல் நிரூபித்ததோடு, மக்களுடைய உணர்வுகளில்புதியநம்பிக்கைச் சுடர்களையும் வளர்த்து "மாற்ற முடியாது என மக்களால் உறுதியாக நம்பப்பட்ட தோற்றப்பாடுகள் யாவும் மாற்றப்பட முடியும் என உறுதிசெய்வதற்கும், மக்கள் தங்களது உரிமைகளை மீளப் பெற தீர்மா னித்துவிட்டால், அவர்களை எந்தவொரு ஆயுதமோ, தாக்குதலோ அழித்துவிட முடி யாது'' என்பதற்கும் மொன்காடாத் தாக் குதல் தவிர்க்க முடியாததாக அமைந்தது கியூபாப் புரட்சியின் தோற்றத்திற்கு இத் தாக்குதலே காரணமாகவிருந்தது எனலாம்.

''மனிதர்கள் தங்களது இதயங்களில் ஒரேமாதிரியான கொள்கைகளைக் கொண்டுள்ளபோது, அவர்களை எவற்றாலும் தனிமைப்படுத்திவிட முடியாது. சிறைச்சாலைச் சுவர்களோ, கல்லறைகளோ அவர் களைப் பிரித்துவிட முடியாது, ஒரே நினைவு, ஒரே ஆத்மா, ஒரே கருத்து, ஒரே உணர்வு, ஒரே பெருமை அவர்கள் அனைவரையும் பிணைத்திருக்கும்''.

— நீதிமன்றத்தில் ஃபிடெல் காஸ்ட்ரோ ஆற்றிய
உரையின் ஒரு பகுதி —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமும் பெண்நிலை வாதமும்.

— உதயம் —

'மூன்றும் உலக நாடுகளின் மரபு வாதிகளும் அரசியற் பழமை வாதிகளும், சில இடதுசாரிகளும் கூட பெண் நிலை வாதம் (Feminism) சீரழிந்த மேனாட்டு முதலாளித்துவத்தின் விளைபொருள் எனவும், அந்நிய கலாச்சாரத்தைச் சார்ந்தது எனவும் அதனால் மூன்றும் உலகத்துப் பெண்களுக்குப் பொருத்தமற்றது எனவும் கூறுகின்றனர். அத்துடன் பெண்நிலை வாதம் பூர்ஷிவாக்களின் கருத்தியல் நிலை எனவும் இது ஒரு புறம் பெண்களை அவர்களது மதம், கலாச்சாரம், குடும்பப் பொறுப்புக்களிலிருந்தும், இன்னோர் புறம் தேசிய விடுதலைப் போராட்டங்களிலிருந்தும் அந்நியப்படுத்துகின்றதெனவும் அவர்கள் கூறுகின்றனர்.

எனவே தான் இப் பிரச்சினைகள் சிலவற்றை எடுத்து ஆராய்வது அவசியம் எனவும், பெண்நிலைவாதம் மூன்றும் உலக நாடுகளில் முற்றிலும் மேற்குலகால் திணிக்கப்பட்டது அன்று என்றும் வரலாற்று நிலைமைகளே இதன் தோற்றத்துக்கான சூழலை உருவாக்கியது எனவும் எடுத்துக் காட்ட முனைந்தேன்.

Feminism and Nationalism in the third World என்ற தமது நூலின் முன்னுரையில் குமாரி ஜயவர்த்தன மேற்கண்ட வாறு கூறுகிறார். தேசியத்திற்கும் பெண் நிலை வாதத்திற்கும் இடையிலான தொடர்பையும் மூன்றும் உலக நாடுகளில் 19-ம் 20-ம் நூற்றுண்டுகளின் பெண் நிலைவாதத்தின் சமூகப் பொருளாதாரப் பின்னணியையும் விளக்கும் முன்னுரையில் சுருங்கிய வடிவினை இங்கு தருகிறோம்-ஆசிரியர்

ஆசிய ஆபிரிக்க நாடுகளில் எழுச்சியுற்ற பெண் விடுதலைக்கான இயக்கங்களும் போராட்டங்களும் ஒரு புறம் ஏகாதிபத்தியத்திற்கும், பல்வேறு வடிவிலான அந்நிய ஆதிக்கத்துக்கும், மறுபுறம் நிலப் பிரபுத்துவ முடியாட்சி, உள் நாட்டுச் சுரண்டல், பாரம்பரிய தந்தைவழி அமைப்பு சமய நிறுவனம் ஆகியவற்றுக்குமான எதிர்ப் புணர்வின் பின்னணியில் நோக்கப்பட வேண்டியவையாகும். 19-ம் நூற்றுண்டின் பிற்பகுதியையும் 20-ம் நூற்றுண்டின் முற்பகுதியையும் சேர்ந்த புரட்சிகர பெண் நிலை வாதத்தை வெளிப்படுத்தும் உதாரணங்கள் பெண்நிலைவாதம் ஒரு விலகல் அல்ல; பூர்ஷீவா கோட்பாடு அல்ல. ஆனுல் போராட்டத்தின் எல்லாக் கால கட்டங்களிலும் நிரந்தரமாகத் தொடர்ந்து இடம் பெற வேண்டியது என்பதற்கான பெறுமதி மிக்க சான்றும் உள்ளது.

முற்பட்ட காலங்களில் பலவகையில் இடம் பெற்றிருந்த போதிலும் 19-ம் 20-ம் நூற்றுண்டுகளில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் 'பெண்கள் பிரச்சனை' எழுச்சியுற்றது. இக் காலத்தில் முதலாளித்துவ விருத்தியின் போது, சமூகத்தில் பெண்கள் நிலை புதிய பரிமாணங்களைப் பெற்றது. அந்நிய, உள்நாட்டு முதலாளிகட்கும் நிலச் சொந்தக்காரருக்கும் பெருந்தோட்டம், விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளில் பயன்படக் கூடிய மலிவான உழைப்புச் சக்தியாக பெண் தென்பட்டாள். காலனித்துவ அதிகாரிகளுக்கும், மிசனரிகளுக்கும், காலனித்துவப் பொருளாதாரத்தை நிர்வகித்த (கிறிஸ்தவ) அதிகாரிகளின் அன்னையராகவும் மனைவியராகவும் வாழப் பயிற்றுவிக்கப்படக் கூடியவளாயிருந்தாள். உள்நாட்டுப் பூர்ஷீவா வர்க்கத்தைச் சேர்ந்த ஆண் சீர்திருத்த வாதிகள், தேவையான அளவு மேனாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயப்படக் கூடியவளாகவும் அடுத்த தலை முறையினரில் நல்ல செல்வாக்கைச் செலுத்த வேண்டியவளாகவும், பெண்ணைக் கருதி னர்.

முதலாளித்துவத்திற்கு முந்திய காலத் திலேயே வயலிலும் தோட்டங்களிலும், குடும்பக் கைத்தொழில்களிலும் பெண்கள் வேலைச் சுமையால் உழன்றது உண்மை தான். ஆனால் முதலாளித்துவத்தின் விருத் தியுடன் தான் பெண்கள் தமது உழைப்பைக் கூலிக்கு விற்கும் நிலை உருவாகியது. மலி வான இலவசமான உழைப்பை முதலா ளித்துவம் தேடிய போது அத்தகைய உழைப்பை அளிக்கக் கூடிய பெண்கள் வெளி உலகில் நடமாடுவதைத் தடுக்கும் அவர்கள் 'சுதந்திரத்திற்கு' எதிரான கோட் பாடுகள் தடையாக இருந்தன. எனவே தான் மேலும் பெண்கள் 'விடுதலை அடைந்து' தொழிலதிபர்களினதும், தோட் டத் துறையினரதும் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டன.

மூன்றாம் உலக நாடுகளில் பெண்களை இம்சித்த சில குறிப்பிட்ட வழக்கங்கள் சீர்திருத்த வாதிகளின் பெரும் அக்கறைக்கு உள்ளாகின. 'சதி' எனப்படும் விதவை எரிப்பு, பாதங்கட்டுதல், பலதாரமணம் ஆகியவை உதாரணங்களாகும். இவற்று டன் ஒரு தார மணத்தை வற்புறுத்தும் கிறிஸ்தவ கருத்துகளுக்கு எதிரான சில வழக்கங்களும் காட்டுமிராண்டித்தனமா னவை எனக் கருதப்பட்டன. தாய் வழிச் சமூக அம்சங்கள், பல புருஷ மணம், பரஸ் பர இணக்கத்துடனான விவாகரத்து ஆகி யவற்றையும் இவர்கள் தகாதவை எனக் கூறினர். இவை இலங்கையில் கண்டியில் நிலவியவை. இவற்றை மிஷனரிகள் மட்டு மன்றி உள்நாட்டுப் பூர்ஷ்வாக்களும் கடு மையாக விமர்சித்தனர். இத்துடன் தேசிய பூர்ஷ்வா சீர்திருத்தவாதிகள் தமது சமூகத் தில் ஏற்கனவே இருந்த மேற் குறிப்பிட் டது போன்ற வழக்கங்கள் பூர்ஷ்வா குடும்ப வாழ்க்கைக்கு குந்தகம் விளைவிப்பவை எனக் கருதினர். இதனால் அவர்களது சீர்திருத்தம் சமூகத்தின் அடிப்படை அமைப்பை மேலும் பலப்படுத்துவதாக இருந்ததே ஒழிய மாற்றுவதாக இருக்க வில்லை.

பெண்களின் உரிமை பற்றிய சர்ச்சை களில் முக்கிய இடம் பெற்றது கல்வியா கும். உள்நாட்டுப் பூர்ஷ்வா வகுப்பின் வளர்ச்சியுடனும் தேசியத்தின் எழுச்சியுட னும் பெண் விடுதலை, பெண் கல்வி ஆகியன முனைப்புப் பெற்றன. ஆண் சீர்திருத்த வாதிகளின் நோக்கங்கள் பலதரப்பட்டு இருந்த போதிலும் பெண்களுக்குக் கல்விப் பிரச்சினை மிகப் பிரதானமாக இருந்தது. ஏனெனில் கல்வியின்மையால் தொழில் சமூக அங்கீகாரம் அற்றிருந்த பெண்கள் ஆண்களைச் சார்ந்து வாழ வேண்டியவராகக் கருதப்பட்டனர். மேனாட்டுக் கல்வியினதும் மிஷனரி செல்வாக்கினதும் விளைபொருளாக விருந்த பூர்ஷ்வா ஆண் அந்நிய மொழி யைக் கற்ற, புதிய பாணியில் உடைய ணிந்து மேனாட்டு முறைமைகளுக்கு இயைந்த காலனித்துவ சமூகத்துக்கு ஏற்றவளாயி ருந்த பெண்ணையே தனது மனைவியாகக் கொள்ள விரும்பினான். இப் பெண்கள் பழைய சமூகத்தில் 'பிற்போக்கானவை' எனக் கருதப்பட்ட யாவற்றையும் மறு தலிக்க வேண்டியிருந்தது. அதே சமயம் தேசிய கலாசாரம், அதே சமயம், குடும்ப மரபுகள் ஆகியவற்றின் காவலர்களாகவும் ஒரே சமயத்தில் நவீனராகவும் மரபாளரா கவும் இருக்க வேண்டியிருந்தது.

ஆனால் எத்தகைய கல்வி பெண்களுக்குச் சிபார்சு செய்யப்பட்டது என்பதே வினா. அது காலனித்துவ சமூகத்தின் பொரு ளாதார சமூகத்தட்டில் உச்சத்துக்கு அறிய உள்நாட்டு ஆண்களுக்கு நல்ல மனைவியரை யும் உருவாக்கும் நோக்கமுள்ள கல்வி. பாரம் பரிய தந்தைவழிக்கட்டமைப்புக்குள் பெண் களுக்கு கல்வி அளிப்பதும், அவர்களை மேனாட்டுமயப்படுத்துவதும் நிகழ்ந்த போதி லும் இக் கல்வியால் பல வாய்ப்புக்களையும் பெற்ற பெண்கள் மேலும் பல கோரிக்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைத்தனர். பெண்களைக் கட்டுப்படுத்திய சமூகபழக்க வழக்கங்கள் பொருளாதார, சட்ட அரசியல் முறைமைகள், ஆண்களைச் சார்ந்தவர்களாகிய மரபுகள் ஆகியவற்றிலிருந்து விடுபட வேண்டும் என அவாவினர். மேலும் தீவிரவாதிகளான பெண்கள் போராட்டத்தை மேலும் முன்னெடுத்தனர். இவர்கள் ஒடுக்குதலுக்கும் இடமளிக்கும் தந்தை வழி அமைப்பை எதிர்த்து புரட்சிகரமான அரசியல் சமூக அமைப்பினை வேண்டி நின்றனர்.

இக்கால கட்டத்தும் பெண் நிலைவாதம் பல்வேறு நாடுகளிலும் ஓரே விதமான கதியில் சென்றன. முதலில் பெண் விடுதலை பற்றி அறிவு ஜீவிகளாற் சர்ச்சைகள் நடத்தப் பெற்றன. அடுத்து பெண்கள் ஸ்தாபனங்கள் பெண்களுக்கான பத்திரிகைகள், சஞ்சிகைகள் தோன்றின. பெண்களின் சார்புநிலையை எதிர்த்தும், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய இயக்கங்களிலும் தற்போதைய அமைப்பைத் தூக்கியெறிவதற்கான புரட்சிகரப் போராட்டங்களிலும் பெண்கள் பங்கு பற்ற வேண்டுமெனவும் பிரசாரம் நடைபெற்றது. மூன்றும் உலக நாடுகளில் பெண் நிலைவாதத்தின் ஆரம்பக் கட்டத்திலும் பிரச்சினைகள் சில அவற்றின் முக்கியத்துவம் கருதி இங்கு வாதத்துக்கு விடப்படுகின்றன.

1. மூன்றும் உலகநாடுகளில் ஆரம்பகாலப் பெண் நிலைவாதம் (பொதுவாக ஆய்வுகளில் இது புறக்கணிக்கப்படுவது) 19-ம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் 20-ம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் சமூக மாற்றங்களுக்குக் காரணமாயிருந்த சமூக சக்திகளுள் ஒன்றுயிருந்தது. இக்காலத்தில் தேசீய போராட்டங்கள் விவசாயிகள் கிளர்ச்சி தொழிலாளர் போராட்டங்கள் ஆகியவற்றில், பெண்கள் வரலாற்றை மீட்டெடுக்கும் பணியில்இவற்றில் அக்கறை செலுத்துவது மிக முக்கியமானதாகும். இதில் மூன்று வகையான நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும்.

(அ) குடும்பம், சமூகம், ஆகியவற்றில் பெண்களின் நிலை. அரசியல் பொருளாதார துறையில் ஆண்களைச் சார்ந்திருத்தல் ஆகியவற்றுக்கு எதிரான பெண்களின் போராட்டங்கள்.

(ஆ) பெண்களைப் பாதிக்கும் சமூகக் கொடுமைகட்கு எதிரானவையும், சம உரிமையை வேண்டுபவையுயுமான போராட்டங்கள். இவை பெரும்பாலும் ஆண் சீர்திருத்தவாதிகளால் நடத்தப் பெற்றவை.

(இ) காலனித்துவம், அந்நிய ஆக்கிரமிப்பு முதலாளிகள் நிலப்பிரபுக்கள் ஆகியோரின் வர்க்கங்களுக்கு முறைகள் ஆகியவற்றுக்கெதிரான வெகுசன இயக்கங்களில் பெண்களின் பங்கு பற்றல்.

2. பெண்கல்வி, சொத்துரிமை, பலதார மணம், சதி, விதவாவிவாகம் போன்றவை உயர்வர்க்கத்தினரின் பிரச்சினைகளே. இவையே இந்நாடுகளில் பெண்களின் எரியும் பிரச்சனைகளாகவும் காட்டப்பட்டன. வெளிப்படையான சமூகக் கெடுதிகளை ஒழிப்பதையும், ஒருதாரமணம், தனிக் குடும்பம் (Nuclearfamily) ஆகியவற்றை ஊக்குவிப்பதையும் ஆதரித்த சீர்திருத்தவாதிகளின் முதலாளித்துவ விருத்தி, நவீனமயமாதல் ஆகியவற்றின் அத்திவாரமாக உறுதியானகுடும்ப வாழ்க்கை அமைவதற்கு உதவினர்.

3. முதலாளித்துவத்திற்கு முந்திய சமூகக் கட்டுப்பாடுகளின் பல்வேறு வடிவங்களிலுமிருந்து பெண்களை விடுத்தல், வீட்டுக்கு வெளியே பெண்கள் தொழில் செய்ய வசதி செய்து கொடுத்தல் போன்றவை பொருளாதார உற்பத்தியின் முதலாளித்துவ வடிவங்களுடனும், கொள்கைகளுடனும் இணைந்து அமைந்தது. பல்வேறு நாடுகளிலும் சீர்திருத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக் காலகட்டமானது முதலாளித்துவ விருத்தியுடனும், பெண்களின் மலிவான உழைப்பை ஆலை உற்பத்தியிலும், சேனைத் துறையிலும் ஈடுபடுத்தும் முயற்சியுடன் இணைந்திருந்தது.

4. பெண்களுக்குக் கல்வி, சொத்து, தொழில், வாக்குரிமை, அரசியல் பிரதிநிதித்துவம் போன்ற ஜனநாயக உரிமைகளை அளித்தமை பூர்வமாக பெண்களின் நலன்களுடன் இணைந்ததாகும். இவர்களிற் சிலர் இத்தகைய கோரிக்கைகள் நிறைவேறிய போது 'சமஉரிமை' என்னும் கானல் நீரால் திருப்தி அடைந்து தமது அடிப்படையான சார்புநிலைக்கே மீண்டும் திரும்பினர். எனினும் பெண்களிடையே கல்விப் பரம்பல், அவர்களிடையே பெருமளவிலான விழிப்பை ஏற்படுத்தி தேசிய விடுதலைக்கும் புரட்சிக்குமான போராட்டத்தில் பெண்கள் ஈடுபட ஊக்கமளித்தது.

5. மூன்றும் உலகின் தேசிய சூழலில் வளர்ந்த பெண் விடுதலை, தேசியம் ஜனநாயக உரிமைகள், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் ஒரு பகுதியாக அமைந்தது. அதனாலேயே 20-ம் நூற்றாண்டின் முதற் தசாப்தத்தைச் சேர்ந்த தேசியத் தலைவர்கள் தமக்குப் பெண் உரிமைகளில் இருந்த நம்பிக்கைகளை வெளிப்படுத்தினர்.

இந்நூலில் அடுத்து வரும் ஆய்வுகளிலிருந்து பெறப்படும் முக்கிய வேறுபாடுகள் ஏனைய போராட்டங்களில் உள்ளடங்கும் பெண்களின் போராட்டங்களுக்கும், புரட்சிகரமான மாற்றத்தை வேண்டும் வெகுசன இயக்கங்களில் பெண்நிலை உணர்வை ஊட்டிய போராட்டங்களுக்குமுள்ள வேறுபாடுகளாகும். இங்கு Omredt கூறியது மிகப் பொருத்தமானதாகும்.

'சீனாவிலும் இந்தியாவிலும் வளர்ந்த தேசிய இயக்கம் முக்கியமாகச் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பகுதிகளாற் சக்தியூட்டப் பெற்றது. சீனாவைப் போலன்றி இந்திய தேசிய இயக்கம் தன்னுடன் தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும், பெண்களையும் பெருமளவில் இணைத்தது. எனினும் இவ்வியக்கம் உயர்சாதியையும் வர்க்கத்தையும் சேர்ந்த உயர் குழாத்தினரால் எப்போதும் கட்டுப்படுத்தப்பட்டது. இதனாலேயே இந்தியாவின் கிராமங்களில் ஒரு போதும் சமூகப் புரட்சி நடைபெறவில்லை. இந்தியப் பெண்கள் தேசிய இயக்கத்தின் ஜனநாயக அம்சங்களால் நன்மை பெற்றார்கள். எனினும் உயர்வர்க்கப் பெண்களே இந்நலன்களை ஒரு சேரப் பெற்றனர். கீழ்த்தட்டுப் பெண்கள் இவற்றைப் பெற முடியாமற் தடுப்பது சாதிக்கட்டுப்பாடோ, ஆணாதிக்கத்தின் மரபு ரீதியான வடிவங்களோ அல்ல. ஆனால் சமூகப் பொருளாதார சமத்துவமின்மையின் தொடர்ந்து வரும் வடிவங்களே.

''மக்கள் இனத்தை நாம் அனைவரும் மனப்பூர்வமாக ஒருவருக்கு ஒருவர் நேசிக்கப்போகும் காலத்தைத் துரிதப்படுத்துவதற்காக நாம் சிலரைப் பகைத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது. நம்முடைய முன்னேற்றப்பாதையில் முட்டுக்கட்டை போடுபவர்களை நாம் துடைத்துத் தீர்த்துவிடத்தான் வேண்டும். தனக்குச் சுகவாழ்வும், பெயரும் கிட்ட வேண்டுமென்பதற்காக எவனொருவன் பணத்தை வாங்கிக் கொண்டு மக்களை விலைக்குக் காட்டிக் கொடுக்கிறானோ அவனை நாம் அழித்துத்தான் தீரவேண்டும்.''

— மார்க்சிம் கோர்க்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்கா — பொருளாதார முக்கியத்துவம்

அல்காக்கள் எனப்படுபவை ஒருவகைத் தாவரங்களே! இவை ஒளித் தொகுப்பில் ஈடுபட்டுத் தமக்குத் தேவையான உணவைத் தாமே தயாரிக்கக்கூடியவை. இவை பெரும் பாலும் நீரிலேயே வாழ்கின்றன. அதாவது கடல்நீர், நன்னீர், ஏரி, குளம் போன்றன வற்றில் வாழ்க்கையை நடாத்தும். இவ் அல்காக்களின் உருவ அமைப்பு—நுண்ணிய அமைப்பிலிருந்து குறிப்பிடத்தக்க பெரிய அமைப்புவரை வேறுபடும் உதாரணமாக வொல்வொரக்ஸ் எனப்படும் பச்சை அல்காவை நுணுக்குக்காட்டிமூலமே அவதானிக்க முடியும். ஆனால் லமினேரியா எனப்படும் கபிலநிற அல்கா இருநூறு மீற்றர் நீளமானது. இத்தாவரங்கள் வடக்கு, கிழக்குக் கடற்கரையோரங்களில் அதிகமாகக் காணப் பட்டபோதிலும், இவற்றின் பொருளாதார முக்கியத்துவம் பற்றிய எமது அறிவும் பொருளாதாரத் துறையில் அல்காக்கள் உபயோகப்படும் அளவும் மிகவும் குறைவானதாகவே இருந்துவருகிறது. மேலும் எம்மிடம் உள்ள ஒரு சிறந்த பொருளாதார வளத்தை நாம் ஊதாசீனம் செய்து வருகிறோம் என்பது வருத்தத்திற்குரியதே.

அல்காக்களை, பச்சை அல்காக்கள், சிவப்பு அல்காக்கள், கபில அல்காக்கள் என மூன்று பிரிவுகளாக அவற்றில் காணப்படும் நிறப்பொருளைக் கொண்டு பிரிக்கலாம்.

பச்சை அல்காக்களுக்கு உதாரணம் :

வொல்வொக்ஸ், உல்வா

கபில அலகாக்களுக்கு உதாரணம் ;

சாகாசம், லமினேரியா

சிவப்பு அல்காக்களுக்கு உதாரணம் :

போபைரா, ஜெலிடியம், கிரே லேரியா

அல்காக்கள் வெவ்வேறு துறைகளில் வெவ்வேறுவகையில் உபயோகப்படுகின்றன. அல்காக்களின் உபயோகங்களை எடுத்து நோக்கின்,

(அ) → தொழிற்சாலைகளில் மூலப்பொருட்களாக உபயோகப்படுத்தப்படுகின்றன.

(ஆ) → மனித உணவாகப் பயன்படுத்தப் படுகின்றன.

(இ) → மாடு, ஆடு போன்றவைகளின் விலங்குணவாகவும் பயன்படுத்தப் படுகின்றன

(ஈ) → சிறந்த வளமாக்கிகளாகப் பயன் படுத்தப்படுகின்றன.

(உ) → மருத்துவத் துறையிலும் பயன் படுத்தப்படுகின்றன.

ஜப்பான், சைனா, பிலிப்பைன்ஸ், இன்டோனேசியா போன்ற நாடுகளில் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பியவையும் எழுப்புகின்றவையும் இந்த அல்காக்களே.

## தொழிற்சாலைகளில் மூலப் பொருட்களாக உபயோகப்படுத்தப்படல்

தொழிற்சாலைகளில் உபயோகப்படும் அல்காக்களில் இருந்து பிரித்தெடுக்கப்படும் பதார்த்தங்கள் : அல்ஜின், ஏகார், கராஜினின், ஏகாரோசு, மனிற்றோல், விற்றமின்கள் என்பனவாகும். இதில் அல்ஜின், ஏகார் என்பன எமக்குக் கூடுதலான உபயோகம் மிக்கவை. அவற்றை விரிவாக நோக்குவோம்.

**அல்ஜின்** வர்த்தக ரீதியான பெயர் 'அல்ஜின்' என்பதாகும். இரசாயனவியல் ரீதியாக அது சோடியம் அல்ஜினேற் என அழைக்கப்படும். இப் பதார்த்தம் அனேகமாகக் கபிலநிற அல்காக்களிலேயே காணப்படும் அவற்றில் அல்ஜின் கரைக்க இயலாத கல்சியம் அல்ஜினேற் உப்பாகவேகாணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும். இதைக் கபிலநிற அல்காவி லிருந்து பிரித்தெடுக்க, பின்வரும் முறைகள் கையாளப்படும்.

(அ) கபிலநிற அல்காக்கள் சேகரிக்கப்பட்டு நன்ருகக் கழுவப்பட்டு உலர்த்தப்படும்.

(ஆ) பின் அவை ஐதான ஐதரோ குளோரிக்கமிலத்தால் (Hcp.) பரிகரிக்கப் படும். இக்கட்டத்தில் அல்ஜின் அல்காக் கலங்களின் கலச் சுவரிலிருந்து வேருகும்.

(இ) இத்தொகுதி நீரால் கழுவப்பட்டு அல்காக்கள் வடித்தலினுல் வேருக்கப்படும்.

(ஈ) பின் வடிதிரவத்திற்கு 100°C இல் $No_2Co_3$ சேர்க்கப்படும். இந்நிலையில் சோடியம் அல்ஜினேற் தோன்றும்.

(உ பின் இச்சோடியம் அல்ஜினேற்றிற்கு, ஐதான Hcl. இடும்போது அல்ஜினிக் அமிலம் வீழ்படிவாகும். இது தூய்மையற்றது, நிறமுள்ளது. ∴ உரிய முறையில் நிறநீக்கம்செய்து தூய அல்ஜீனைப் பெறமுடியும்.

அல்ஜின் மிகவும் பாகுத்தன்மையானது. அத்துடன் மனித நலத்திற்கு எத்தகைய தீங்கும் விளைவிக்காதது. நீருடன் சேர்க்கும்போது. நீரை உள்ளெடுத்து ' ஜெலி ' (Jelly) ஐ தோற்றுவிக்கும். இதன் உபயோகங்களிற் சில :

(1) துணி தயாரிக்கும் தொழிற்சாலைகளில், சாயமிடல், பதித்தலில் தடிப்பாக்கும் பதார்த்தமாக (Thickening Agent) ஆகப் பயன்படுத்தப்படும்

(2) ஐஸ்கிரீம் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது.

(3) ஜாம்வகை தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது.

அத்துடன் மட்பாண்ட தொழில் காகிதக் கைத்தொழில் என்பவற்றிலும் பயன்படுத்தப்படுகிறது.

ஏகார் இது சிவப்பு அல்காக்களில் இருந்து பெறப்படும். அத்துடன் இது குளிர் நீரில் கரையாத இயல்பையும் வெந்நீரில் கரையும் இயல்பையும் கொண்டது. இதன் உபயோகங்கள் சில.

1. நுண்ணுயிர்களின் ஆய்வுகூட வளர்ப்பூடமாகப் பயன்படும்.

2. இனிப்பு, மிட்டாய் உற்பத்தியில் பயன்படும்.

3. போட்டோ பிரதிகள் கழுவுதலில் பயன்படும்.

4. மருத்துவத்தில், மருந்து வில்லைகளின் வெளிப்பூச்சாகப் பயன்படும்.

5 " Block " செய்வதில் பயன்படும்.

6. மதுத் தொழிற்சாலையில், மாசுக்களை அகற்றப் பயன்படும்.

## மனித உணவாக அல்காக்கள்

ஜப்பான், சைனு, பசிபிக் தீவுகள் போன்ற இடங்களில் அல்காக்கள் மனித உணவிற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இந்நோக்கில் சிவப்பு அல்காக்களில் போபைரா (Porphyra) உம் கபில அல்காக்களில் லமினேரியா Laminaria,உம் பெரும்பாலும் உபயோகப் படுத்தப்படுகின்றன

போபைரா அல்காக்கள் சேகரிக்கப்பட்டு நன்ருகக் கழுவப்பட்டு, கொதிக்க வைக்கப்பட்டு கூழாக்கப்படும். பின் இக்கூழை ' Bake'' செய்தலின் மூலம் '' பாண் ' பெறப்படும். இதற்கு வெண்ணெய்பூசி உணவாக உட்கொள்ளலாம் தற்பொழுது இந்தியாவில் உல்வா லோசியே ரு எனப்படும் ஒரு வகைப் பச்சை அல்கா, உணவிற்குச் சிறந்ததெனச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது இதைக் '' கடல்கோவா '' என அழைக்கிருர்கள்.

## விலங்குணவாக அல்காக்கள்

அநேகமான அல்காக்கள் புரதச்சத்துக்களை மிக எளிய அமைப்பில் தம்முள்கொண்டுள்ளன. அத்துடன் சில மிக முக்கிய மூலகங்களையும் கொண்டுள்ளன இதனுல் இவற்றை முட்டை இடும் பறவைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவாக அளித்தபோது, அவற்றில் அயடீன் அளவு அதிகரித்தது. அத்துடன் முட்டை இடும் வீதமும் அதிகரித்தது. மந்தைகளுக்கு உணவாக அளித்தபோது, பாலில் கொழுப்புச்சத்தின் அளவு அதிகரித்தது. சில பகுதிகளில் மந்தைகளுக்கு உணவாக தொடர்ச்சியாக அல்காவே பயன் படுத்தப்படுகிறது.

## உயிர்வாயு உற்பத்தியில்—அல்கா

கடல்வாழ் அல்காக்கள் காபன் என்னும் மூலகத்தைப் பெருமளவில் கொண்டுள்ளன. ஆகவே இவற்றை உயிர்வாயு (Bio gas) உற்பத்தியில் உபயோகப்படுத்தலாம். இதற்கு அல்கா சேகரிக்கப்பட்டு, பக்றீரியா வளர்ப்புடன் கலக்கப்பட்டு உக்க விடப்படும், (உ+ம். கபில அல்காவான சாகாசத்தின் 150 கிராமிற்கு, 10 மில்லி பக்றீரியா வளர்ப்பு இடப்படும்.) பின் மாட்டுச் சாணமும் இதனுடன் சேர்க்கப்படும். இரண்டு கிழமைகளின்பின் வாயு உற்பத்தி அவதானிக்கப்படும். உதாரணமாக, 100 கிராம் அல்காவிலிருந்து, 50 இலீற்றர் வாயு உற்பத்தி செய்யப்படலாம்.

## வளமாக்கியாக—அல்கா

அல்காக்களின் நைதரசன் 0·5%உம், பொசுபரசு 0·5%, பொற்ருசியம் 1·2%உம் காணப்படுகின்றன. சாதாரணமாக நாம் பாவிக்கும் உரவகைகளில் இம் மூலகங்களின் அளவு, அல்காவில் காணப்படுவதிலும் குறைவானதே. அத்துடன் அல்காவில் இவை இலகுவில் கரையக்கூடிய நிலையிலேயே உள்ளன. ஆகவே அல்காக்களை வளமாக்கிகளாகப் பாவித்தபோது தாவரங்களின் விளைச்சல் அதிகரித்ததுடன், அவை நோய் வாய்ப்படாமலும் காணப்பட்டன. அண்மையில், இந்தியாவில், இவ் அல்காக்கள் வடித்தெடுக்கப்பட்டு, செறிவாக்கப்பட்டு, ''திரவ வளமாக்கிகள்'' நிலையில் விநியோகக்கப்படுகின்றன.

## மருத்துவத் துறையில்—அல்கா

மருத்துவத்துறையில் அல்கா வெகு காலமாகப் பயன்படுத்தப்பட்டே வருகிறது. உதாரணமாக தொண்டையில் அயடீன் குறைபட்டால் ஏற்படும் கழலைநோய் அல்காக்களின் உதவியுடன் குணப்படுத்தப்படுகிறது.

சிவப்பு அல்காவான ஹிப்னியா (Hypnea) இலிருந்து பெறப்படும் பதார்த்தங்கள் புழுத்தடுப்பு (Worm Repellent) மருந்தாகப் பயன்படுகிறது. லமினேரியா எனப்படும் கபில அல்காவிலிருந்து பெறப்படும், சோடியம் லமினுரின் சல்பேற்ஆனது ''திரள் தலைத் தடுக்கும்'' (Anti Cororulant) மருந்தாகப் பயன்படுகிறது. சாகாஸின் எனப்படும் நுண்ணுயிர் கொல்லி சாகாசத்திலிருந்து பெறப்படும். கசத்தடுப்பு மருந்தாக இந்தியாவில் என்ரெரோமோஃபா (Enteromorpha) எனும் அல்கா பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இன்னும், எத்தனையோ ரீதியிலான உபயோகங்களை நாம் அல்காக்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இன்றைய, தமிழ்ப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட இருண்ட நிலைகள், இங்ஙனம் கைக்கருகே இருக்கும் அல்காக்களால் சீர்திருத்தப்பட வேண்டும். உதாரணமாக பாசிக்குடா கடற்கரை, திருகோணமலை கடற்கரைகளில் பாரிய அளவில் அல்காக்கள் வளர்கின்றன. அல்காக்களை இயற்கைச் சூழலில் அன்றி செயற்கை ஊடகத்திலும் வளர்க்கலாம். அத்துடன் அவற்றை உலர்த்திச் சேமிக்கவும் முடியும்.

எமது பொருளார வளத்தை நாமே கட்டி எழுப்பும் விதத்தில் அல்காக்களை நன்கு பயன்படுத்தவேண்டும். மேலும் இவற்றில் ஆய்வுகள் நிகழ்த்தப்படவேண்டும். அல்காவின் பொருளாதார முக்கியத்துவம் உணரப்படவேண்டும்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முன் பக்கத் தொடர்ச்சி)

போது ஒன்றுதிரட்டிய தாக்குதல் என்ற ரீதியில் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. தலைநகரான லுவாண்டாவிலிருந்து 100 மைல் எல்லைக்குள் யுனிற்ரு படைகள் ஊடுருவி விட்டதாக மேற்கு நாடுகளின் ஒற்றர் ஸ்தாபனங்கள் அறிவிக்கின்றன. ஏறக்குறைய 25,000 கியூபாத் துருப்புக்கள் அங்கோலாவில் நிலைகொண்டிருந்த போதிலும், கெரில்லாக்களின் ஆதிக்கம் நிறைந்த கிராமப் பகுதிகளுக்கு கியூபா வீரர்கள் செல்வதற்கு அஞ்சுகிறார்கள். அண்டை நாடான நமிபியாவிற்கு சுதந்திரம் வழங்குவதற்கான இராஜதந்திர முயற்சிகள் அதிகரித்து வருவதால், அங்கோலாவிலிருந்து கியூபாத் துருப்புக்கள் திருப்பியழைக்கப்பட்டு விடும் எனவும் கியூபா வீரர்கள் நம்புவதால், அவர்கள் தமது உயிரை பணயம்வைக்கத் தயங்குகிறார்கள்.

அங்கோலா ஜனாதிபதி 'டொஸ் ஸன்ரோஸ்' இனது மக்கள் ஆதரவு குறைவடைந்து வருவதாகவும், கிராமப்புறங்களில் யுனிற்ரா தலைவரான 'ஜோனஸ் சவிம்பி' யின் ஆதரவு பெருகி வருவதாகவும் மேற்கு நாட்டு ஒற்றர் ஸ்தாபனங்கள் அறிவிக்கின்றன.

விரைவில் தலைநகருக்கு மின்சாரத்தையும் குடி தண்ணீரையும் வழங்கும் பாரிய நீர்-மின்சார நிலையம் அமைந்துள்ள டொன்டோ பகுதியில் யுனிற்ரா படையினர் தாக்குதலை மேற்கொள்வார்கள் என மேற்கு நாட்டு ஒற்றர் ஸ்தாபனங்கள் எதிர்பார்க்கின்றன.

---

'' தங்கு தடையற்று நீ முன்னேறிச் செல்லவேண்டுமானால், சமயங்களில் நீ உன் விருப்பத்திற்கு மாறான காரியங்களைக்கூடச் செய்யவேண்டும். அதற்காக நீ சகலத்தையும், உன் பரிபூரண இதயத்தையும் விட்டுக்கொடுக்கத் தயாராயிருக்கவேண்டும். கொள்கைக்காக நீ உன் உயிரை இழப்பது மிகவும் லேசான காரியம். அதைவிட மகத்தானவற்றை, உன்னுடைய சொந்த வாழ்வில் உனக்கு மிகவும் அருமையும் விருப்பமும் நிறைந்தவற்றைக்கூட நீ தியாகம் செய்யவேண்டும். அப்படிப்பட்ட மகத்தான தியாகத்தினால்தான், நீ எந்த ஒரு சத்தியத்திற்காகப் போராடுகிறாயோ அந்தச் சத்தியம் எப்படி ஒரு மகா சக்தியாக வளர்ந்தோங்கிப் பெருகுகிறது என்பதை உன்னால் பார்க்க முடியும். அந்தச் சத்தியம்தான் இந்த உலகத்தில் உனக்கு மிகவும் அருமை வாய்ந்த, அரிய பொருளாக இருக்கும்! ''

நன்றி — '' தாய் ''

---

'' தமிழன் மரபினது புத்தம்புது எழுச்சி வரலாற்றுக் காப்பியங்களுக்குக் கதாபாத்திரங்கள் தேவை. கோழைத்தனமான கூழாங் கற்களைப் போன்ற கதாபாத்திரங்களல்ல. வீரஞ்செறிந்த பளிங்குக்கற்களையுடைய கதாபாத்திரங்கள் தேவை.''

அறிஞர் அண்ணா.

---

'' காலத்துக்கேற்ற கருத்துக்களே தேவை! கருத்துக்களுக்கேற்ற காலமல்ல. காலத்திற்கொவ்வாத கருத்துக்களை ஒதுக்கவேண்டும்! போக்கவேண்டும்!

அறிஞர் அண்ணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

' இரு இனங்களுக்குமிடையே காலம், காலமாக நில விய விரோதம்பற்றி ஆணைக்குழு ஓரளவுக்கு அறிந்திருந் தது. ஆயினும், திரு. பாமரின் நூல் அன்று இருந்தி ருக்குமானல் இவ் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வுபற்றி ஆணைக்குழு அதிகம் நம்பிக்கை வைத்திருக்காது...... ... எனவும், சகோதர ஆணைக்குழுவினருக்கும் விளைவுகள் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளன என்பதைச் சொல் லத் தேவையில்லை.

சிங்களத் தலைவர்கள் அவர்களால் அளிக்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு மதிப்பளிக்கவில்லை என்பது பற்றி இலங்கைக்கு ஒற்றையாட்சியைப் பரிந்துரை செய்த 'சோல் பரிப் பிரபு' மேற்கண்டவாறு பேராசிரியர் B. H Bhamer இன் "பிளவுபட்ட இலங்கை" என்ற நூலில் குறிப்பிட் டுள்ளார்.

அட்டைப்படம் :

*1983 ஜூலை இனக் கலவரத்தின்போது காயப்பட்ட ஒருவரையும், இக் கல வரத்தின்போது சிங்கள மாணவர்கள் நிர்வாணமாக்கித் தாக்கி, மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதையும், ஜூலை 24-ம் திகதி இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவர்களையும் காண்கிறீர்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாழ்த்துக்கள்*

நிதான விலையில்

உயர்ந்த ரகத்தில்

புதிய டிசைன்களில்

பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

**க. நாகமுத்து அன் சன்ஸ்**

50, பெரியகடை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23475

---

" இழத்தல் என்பதனையும்

ஒருநாள் இழப்போம் "

தளிரின் வளர்ச்சிக்கு

ஒரு நண்பனின் வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ சகலவித சைக்கிள்

✤ உதிரிப் பாகங்கள்

✤ தொலைக்காட்சி வகைகட்கும்

மற்றும்

வீட்டுத்தளபாட அலங்காரப் பொருட்களுக்கும்

## பஸ்ரின் பலஸ்

மெயின் வீதி,
மருதமுனை 2,
கல்முனை.



" நாளுக்கு நாள் மாறும் நவநாகரீகப்

பிடவைத் தினுசுகளுக்கு

ரஞ்சனாஸ்

17, 18, 18A நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 24015


அட்டைப்பதிப்பு: ஆனந்தா அச்சகம், அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org